

# முதன் முதலாய்...

கு.வீரா


# முதன் முதலாய் ...

கு. வீரா

தர்மேந்திரா கலையகம்
நிதர்சனம்

| | |
|---|---|
| முதன்முதலாய்..... | **Muthan Muthalaay...** |
| கவிதைகள் | A Collection Of Poems by |
| கு. வீரா | **K.Veera** |
| முதற்பதிப்பு: | **First Edition** |
| ஒக்ரோபர் ,2003 | october,2003 |
| ஒளிப்படமும் | **Photography And** |
| முகப்பமைப்பும் | **Cover Designing** |
| செந்தோழன் | Senthozan |
| ஓவியக்கவிதை | **Ellustrations** |
| சு. ராஜன் | S. Rajan |
| வெளியீடு | **Published by** |
| தர்மேந்திரா கலையகம் | Tharmenthira Kaliyakam |
| நிதர்சனம் | Nitharsanam |
| அச்சுப்பதிப்பு | **Printed at** |
| நிலா பதிப்பகம் | Nilla Pathippakam |
| புகையிரத நிலைய வீதி, | Railroad, |
| கிளிநொச்சி | Kilinochchi. |
| விலை | **Price** |
| ரூபா 90.00 | Rs.**90.00** |

"ஈழப்புரட்சி நிலத்தை
தங்கள் குருதியால்
சிவக்கப் பண்ணி
அதேமாறாத புன்னகையுடன்
எங்கள் மண்ணுக்காய்
சாவெழுதிப்போன - அந்த
மாவீர மனிதங்களுக்கு
நினைவில் ஊற்றாகி
கையிலேறி
மையிலூறிய- என்
எழுத்துக்களை
அர்ச்சனைப் பூக்களாய்
அர்ப்பணிக்கிறேன்"



## வாசலில்

“தமிழரின்
தலைவிதியை
தீர்மானிக்கும்
காலத்தில்
எனைப் பெற்றெடுத்த
அம்மா
அப்பா வினது
பாதங்களை
வணங்கி ....



# வாழ்த்துவதில் ...

"முதன் முதலாய்..." கவிதைத் தொகுதி விடுதலை பெறத்துடிக்கும் ஓர் தேசத்தின் ஆன்ம வெளிப்பாடாக, அதன் பிரசவ வேதனையை புற உலகுக்கு உணர்வின் வரிகளாக வெளிப்படுத்தி நிற்கின்றன. விடுதலை காணப்புறப்பட்ட ஓர் தேசத்தின் கதையாக அங்கு வாழும் மக்களின், போராளிகளின் சுதந்திர வேட்கையை உள்ளத்துணர்வுகளை மிக ஆழமாக தெளிவாக இக்கவிதைகள் பிரதிபலிக்கின்றன. வளர்ந்து வரும் ஓர் இளம் போராளிக் கவிஞனான வீராவின் இக்கவிதைகளில் பிறந்து தவழ்ந்து நடைபயில முனையும் ஓர் குழந்தையின் உத்வேகத்தை துடிப்பினை அறியமுடிகிறது.

இக்கவிவரிகளில் தான் வாழும் போராட்டச் சூழல், போராளிகளின் ஆழமான உள்ளத்துணர்வுகள், மாவீரர்களின் தியாகம், அர்ப்பணிப்பு போன்றன வரிக்குவரி ஆழமாக மனதைத் தொடும் வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எமது தேச விடுதலையின் இயங்கு சக்திகளாக நிற்கும் போராளிகளின் உள்ளத்திலிருந்து வெளிப்படும் உணர்வலைகள் இலக்கியங்களாக பேணிப்பாதுகாக்கப்பட்டு எமது எதிர்கால சந்ததிக்கு கொடுக்கப்பட வேண்டியவை. இவ்வகையில் கவிதைகளாக உருப்பெற்றுள்ள இவரின் உணர்வு வீச்சு நூலுருப்பெற்று எம் கரங்களில் தவழ்வதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

எமது தலைமைத்துவத்தின் தீர்க்கமான வழிகாட்டலையும் அத்தலைமைத்துவத்தின் மீதான பற்றுதலையும் வெளிப்படுத்தும் இக்கவிவரிகள் "சின்னக்குழந்தையின் சிரிப்பைக் கூட ரசிக்கும் நல்ல கலைஞன்" என எமது தேசியத் தலைவரின் மென்மையான உள்ளத்தை அற்புதமாக வெளிக்காட்டுகிறது. தனது உள்ளத்துணர்வுகளை மிக ஆழமாக, அழகாக வெளிப்படுத்தும் இவர் மேலும் வளர்ந்து மேன்மையுறவும் இன்று மொட்டவிழ்ந்து மலரும் இக்கவிதைகள் பூத்துக்குலுங்கி மணம் பரப்பிநிற்கவும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

" புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம். "

திரு . சு. ப. தமிழ்ச்செல்வன்,
*பொறுப்பாளர்,*
*அரசியல்துறை,*
*தமிழீழ விடுதலைப்புலிகள்.*

# வெளியீடுவதில்...

ஒரு விடுதலைப்போராளியை கையில் ஆயுதங்களோடு மாத்திரம் பார்க்கின்றவரல்ல எங்கள் தலைவர். அவனின் பன்முகத்தோற்றத்தினை வெளிக்கொணர்வதில், அவனைத் தட்டிக் கொடுப்பதில் தந்தைக்கு ஒப்பானவர். அந்த வகையில் எமது நிறுவனப் போராளியான வீராவின் "முதன் முதலாய்..." கவிதை நூலும் அமைகின்றது.

ஒளிநாடக்களையும், ஒலிநாடாக்களையும் மாத்திரமே வெளியிட்ட நாங்கள், புது முயற்சியாய் வீராவின் இந்நூலை வெளியிடுகின்றோம்.

வீரா ஒரு நல்ல கவிஞனாக இருந்ததினால் தான் அவனின் பாடல்களும், வீடியோப்பிரதிகளும் நிகழ்ச்சித் தொகுப்புக்களும் தரமிக்கனவாக வெளிவந்தன. கவிதைகளை எழுதுவதில் மட்டும் கைதேர்ந்தவனில்லை. அதனை அச்சொட்டாக , அழகுறப்படிப்பதிலும் பலரின் பாராட்டுதல்களைப் பெற்றவன்.

இனிவரும் நாட்களிலும் எமது நிறுவனத்தினரின் படைப்புக்கள் நூல் வடிவில் வெளிவரும். அதற்கு முதற்படியாக வீராவின் "முதன் முதலாய்..." அமைகின்றது.

" புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம். "

அன்புடன்
சி. சேரலாதன்,
*பொறுப்பாளர்,*
*நிதர்சனம்.*

# வருடியதில்...

நாற்றுமேடையில் தெரியும் நல்லபயிர்
வீரா விளைச்சலுக்குரியவர்.

கவிஞர் வீரா என இனி அறியப்போகும் போராளி வீராவுக்குள்ளே பன்முக ஆற்றல் பொதிந்திருப்பதை என்னுடன் இவர் பழகத்தொடங்கிய ஆரம்ப நாட்களிலேயே அவதானித்துக் கொண்டேன். தினமும் கேள்விகளாலேயே வேள்வி நடத்தும் தேடலராக என்னிடம் வந்த மிக இளமைக்காலத்திலேயிருந்து இன்று, கவிஞனாக, பாடலாசிரியனாக, ஒலிப்பதிவாளனாக, அறிவிப்பாளனாக, பேச்சாளனாக, நடிகனாக என இவரின் படியேற்றங்கள் ஒவ்வொன்றுக்கும் பக்கத்தில் நின்று பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். ஒருபோராளி என்பதைத் தினமும் உறுதிப்படுத்திக் கொண்டு கலைகள் மீதும், இலக்கியத்தின் மீதும் வெற்றிகொண்ட மானுடம் அவாவும் இளைஞனாகவும் தன்னை வளர்த்துள்ளார். உண்மையில் பன்முகத்தோற்றம் கொண்ட போராளி வீராவின் முழுமையான ஆற்றல் வடிவம் இன்னும் அதிகம் வெளியே தெரியவரவில்லை. அவை வெளியே வெளிச்சத்திற்கு வரும் போது தான் நானிங்கே எழுதுவதும் எவ்வளவு உண்மையெனத் தெரியவரும்.

இன்று போராளிகளே கவிஞர்களாக, ஓவியர்களாக, இலக்கியப்படைப்பாளிகளாக, நடிகர்களாக, சிற்பிகளாக, இயக்குநர்களாக, நடனக்காரர்களாக, பாடகர்களாக, இசையமைப்பாளர்களாக உருவாகி யானைக்கிளைபோல பெரும் கூட்டமாய்ப் பெருகி நிற்கின்றனர். இந்தப் புதிய தோற்றுவாய் வலிந்த முன்னெடுப்புக்களோ தற்செயலான சம்பவங்களோ அல்ல, தவிர்க்கமுடியாத காலத்தின் விளைவு. மிக உயரத்திற்கு எழுப்பப்பட்டிருக்கும் எமது தாயக விடுதலைப் போராட்டத்தின் கோபுரக்கலசம் எழுவான் திசையில் விடியலைக்காணத் தொடங்கிவிட்டது. முகிலுரசிப்போகும் அதன் வாழ்வும், வனப்பும் தம்மைச் சொல்வதற்கு, தம்மைப் பாடுவதற்கு, தம்மை வரைவதற்கு, தம்மை அறியக்கொடுப்பதற்கு தங்களிடமிருந்தே இளையவரை தயார் படுத்துகின்றது.

இனம் காணப்பட்ட புதியவர்களை எழுதச்சொல்லியும், பாடச் சொல்லியும் பலம் கொடுத்து நிற்கின்றது. "நிறைய வாசியுங்கள், நிறைய யோசியுங்கள், நிறையவே எழுதுங்கள் " என எமது தலைவர் அடிக்கடி தன் போராளிகளுக்குச் சொல்லி உற்சாகப்படுத்துவதும் இதற்காகவே. அந்த வாய்மொழியை வழி மொழிந்தபடி புதிய இலக்கிய விளைச்சலுக்கு விதையெறிந்துவிட்டு காத்திருக்கிறது எம் வீரமண். எங்கள் கனவுக்கும், எதிர்பார்ப்புக்கும் இந்த இளைய தலைமுறையே நம்பிக்கை நாற்றங்கால். நாற்று மேடையில் செழிப்புற்றுள்ள பயிர்களில் ஒருவர் வீரா.

கப்டன் மலரவன், மேஜர் சிட்டு, மேஜர் கிண்ணி, கப்டன் வானதி, கப்டன் கஸ்தூரி, மேஜர் பாரதி, லெப் கேணல் பாவரசன், கப்டன் வெள்ளை என நீளும் மாவீரர் பட்டியலிலுள்ள கலை இலக்கிய ஆற்றலர்களும் ச.பொட்டு, மலைமகள், உதயலட்சுமி, தூயவன், தமிழ்மாறன், புரட்சிகா, அ.அன்ரனி, பார்த்தீபன், அன்புமாறன், இசைப்பிரியன், துளசிச்செல்வன், மலையவன், வீரா, என நீளும் போராளிகளுக்குள் படைப்பாளிகளான வரிசையும் புதிய எழுத்து, புதிய இசை, புதிய அரங்காற்றுகை என புதிய புரிதலுக்கான சுவடுகள் பதிக்கத்தொடங்கியுள்ளனர். இவர்களுக்குள்ளும் ஓரிருவருடன் சேர்ந்து வீரா முன்வரிசையில் நிற்கின்றார்.

மூத்தோரைப்பணிதல் என்ற முறைமையுடன் எதையும், எவரையும் எவர்முன்னும் கேள்விகேட்டுத்தெளியும் இளவல் வீராவை எனக்கு மிகவும் பிடிக்கும். அனைத்தையும் அப்படியே விழுங்கிக்கொள்ளாமையும், எல்லாவற்றையும் வீசியெறிந்து நிராகரித்துவிட்டு வெறும் வெளியில் நில்லாமையும் , தனக்குள்ளே தராசிலிட்டு ஏற்றுக்கொள்ளும் இவரின் பாங்கும் என்வரிப்புடன் இசைவாகின்றது. இளமைக்காலத்திற்கேயுரிய பழையன அனைத்தையும் காலாலொற்றும் சிறுவமிடுக்கு இல்லாமையே இவர் மீதான காதலுக்கு இன்னொரு காரணம்.

வீரா வாழ்நிலையில் பழமைவாதப் பிடியறுந்து போகாத குடும்பச் சூழலிலிருந்து விட்டு விடுதலையாகி வெளியேறி விடுதலைக்கான முள்முடிதரித்தவர். ஆயினும் வேகமெடுத்தோடும் நவீனத்தின் தொடரணிக்குப் பின்னே அகலக்காலெடுத்து ஓடி சுயத்தை உதறிநிற்கும் பாவனைக்காரரல்ல வீரா. உழவுகாலத்தில் அறுவடைக்கும், அறுவடைக்காலத்தில் உழவுக்கும் போகாது காலத்துக்கு ஏற்றதையும், தன்மனதுக்கு ஏற்றதையும் கையேற்கும் பக்குவத்தை வீரா தனக்குள்ளே வளர்த்துள்ளார்.

அகழ்ந்தெடுக்கப்பட்டும் புதிய சொற்கள், பூடக உருமறைப்பு, சொற்களை பிரித்தடுக்கிச் செய்யும் சித்து, மொழி பெயர்ப்புக்கவிதைகள் ஏற்படுத்தும் தாக்கத்தின் பிரமை, பிரபலங்களை வழிபிடித்தோடி அவர்களால் பெறும் பத்திரிகைப் பவிசு. இவையெதையும் கணக்கிலெடுக்காது தன் கதையைத் தானே எழுதிச்செல்லும் கையனாய், தன் குரலை தானே பாடிச்செல்லும் வாயனாய் வீரா விளங்குகின்றார். தனக்குத் தெரிந்ததை மட்டும் எழுதி, தன்னைப் பாதித்ததை அல்லது பரவசப்படுத்தியதையே பாடுபொருளாக்கொண்டு உள்ளே கவிதைகள் விளங்குகின்றன. நான் சூரியனுக்குத் தேர் செய்துகொண்டிருக்கின்றேன். நிலவுக்குப் போர்வை நெய்து கொண்டிருக்கின்றேன், என எந்த மிதப்புமின்றி தன் பரிட்சியங்களுடன் மட்டும் கவிதையை இணைத்து விடுகின்றார். பொய்யற்றிருப்பதால் அவை பொலிவுற்றுத் திகழ்கின்றன.

எது கவிதை என்பதற்கான பதிலை இதுவரை யாரும் சொல்லவில்லை, சொல்லவும் முடியாது. அவரவருக்கு பிடித்தமான உணவு சமைப்பது போல் எல்லோரும் தனக்குப் பிடித்ததையே கவிதையென்று சொல்லிக்கொண்டிருக்க காலம் ஓடிக் கொண்டிருக்கிறது. நானும் அப்படித்தான். கவிதை காற்றைப்போன்றது. காற்றைப்போன்றதென்று கூறுவது அரூபமானதென்று அர்த்தத்திலல்ல. காற்றைக்கொண்டு உயிர் வாழலாம், காற்றை அனுபவிக்கலாம், காற்றில் கையளைந்தபடி ஏகாந்த

இனம் காணப்பட்ட புதியவர்களை எழுதச்சொல்லியும், பாடச் சொல்லியும் பலம் கொடுத்து நிற்கின்றது. "நிறைய வாசியுங்கள், நிறைய யோசியுங்கள், நிறையவே எழுதுங்கள் " என எமது தலைவர் அடிக்கடி தன் போராளிகளுக்குச் சொல்லி உற்சாகப்படுத்துவதும் இதற்காகவே. அந்த வாய்மொழியை வழி மொழிந்தபடி புதிய இலக்கிய விளைச்சலுக்கு விதையெறிந்துவிட்டு காத்திருக்கிறது எம் வீரமண். எங்கள் கனவுக்கும், எதிர்பார்ப்புக்கும் இந்த இளைய தலைமுறையே நம்பிக்கை நாற்றங்கால். நாற்று மேடையில் செழிப்புற்றுள்ள பயிர்களில் ஒருவர் வீரா,

கப்டன் மலரவன், மேஜர் சிட்டு, மேஜர் கிண்ணி, கப்டன் வானதி, கப்டன் கஸ்தூரி, மேஜர் பாரதி, லெப் கேணல் பாவரசன், கப்டன் வெள்ளை என நீளும் மாவீரர் பட்டியலிலுள்ள கலை இலக்கிய ஆற்றலர்களும் ச. பொட்டு, மலைமகள், உதயலட்சுமி, தூயவன், தமிழ்மாறன், புரட்சிகா, அ. அன்ரனி, பார்த்தீபன், அன்புமாறன், இசைப்பிரியன், துளசிச்செல்வன், மலையவன், வீரா, என நீளும் போராளிகளுக்குள் படைப்பாளிகளான வரிசையும் புதிய எழுத்து, புதிய இசை, புதிய அரங்காற்றுகை என புதிய புரிதலுக்கான சுவடுகள் பதிக்கத்தொடங்கியுள்ளனர். இவர்களுக்குள்ளும் ஓரிருவருடன் சேர்ந்து வீரா முன்வரிசையில் நிற்கின்றார்.

மூத்தோரைப்பணிதல் என்ற முறைமையுடன் எதையும், எவரையும் எவர்முன்னும் கேள்விகேட்டுத்தெளியும் இளவல் வீராவை எனக்கு மிகவும் பிடிக்கும். அனைத்தையும் அப்படியே விழுங்கிக்கொள்ளாமையும், எல்லாவற்றையும் வீசியெறிந்து நிராகரித்துவிட்டு வெறும் வெளியில் நில்லாமையும் , தனக்குள்ளே தராசிலிட்டு ஏற்றுக்கொள்ளும் இவரின் பாங்கும் என்வரிப்புடன் இசைவாகின்றது. இளமைக்காலத்திற்கேயுரிய பழையன அனைத்தையும் காலாலொற்றும் சிறுவமிடுக்கு இல்லாமையே இவர் மீதான காதலுக்கு இன்னொரு காரணம்.

வீரா வாழ்நிலையில் பழமைவாதப் பிடியறுந்து போகாத குடும்பச் சூழலிலிருந்து விட்டு விடுதலையாகி வெளியேறி விடுதலைக்கான முள்முடிதரித்தவர். ஆயினும் வேகமெடுத்தோடும் நவீனத்தின் தொடரணிக்குப் பின்னே அகலக்காலெடுத்து ஓடி சுயத்தை உதறிநிற்கும் பாவனைக்காரரல்ல வீரா. உழவுகாலத்தில் அறுவடைக்கும், அறுவடைக்காலத்தில் உழவுக்கும் போகாது காலத்துக்கு ஏற்றதையும், தன்மனதுக்கு ஏற்றதையும் கையேற்கும் பக்குவத்தை வீரா தனக்குள்ளே வளர்த்துள்ளார்.

அகழ்ந்தெடுக்கப்பட்டும் புதிய சொற்கள், பூடக உருமறைப்பு, சொற்களை பிரித்தடுக்கிச் செய்யும் சித்து, மொழி பெயர்ப்புக்கவிதைகள் ஏற்படுத்தும் தாக்கத்தின் பிரமை, பிரபலங்களை வழிபிடித்தோடி அவர்களால் பெறும் பத்திரிகைப் பவிசு. இவையெதையும் கணக்கிலெடுக்காது தன் கதையைத் தானே எழுதிச்செல்லும் கையனாய், தன் குரலை தானே பாடிச்செல்லும் வாயனாய் வீரா விளங்குகின்றார். தனக்குத் தெரிந்ததை மட்டும் எழுதி, தன்னைப் பாதித்ததை அல்லது பரவசப்படுத்தியதையே பாடுபொருளாக்கக்கொண்டு உள்ளே கவிதைகள் விளங்குகின்றன. நான் சூரியனுக்குத் தேர் செய்துகொண்டிருக்கின்றேன். நிலவுக்குப் போர்வை நெய்து கொண்டிருக்கின்றேன், என எந்த மிதப்புமின்றி தன் பரிட்சியங்களுடன் மட்டும் கவிதையை இணைத்து விடுகின்றார். பொய்யற்றிருப்பதால் அவை பொலிவுற்றுத் திகழ்கின்றன.

எது கவிதை என்பதற்கான பதிலை இதுவரை யாரும் சொல்லவில்லை, சொல்லவும் முடியாது. அவரவருக்கு பிடித்தமான உணவு சமைப்பது போல் எல்லோரும் தனக்குப் பிடித்ததையே கவிதையென்று சொல்லிக்கொண்டிருக்க காலம் ஓடிக் கொண்டிருக்கிறது. நானும் அப்படித்தான். கவிதை காற்றைப்போன்றது. காற்றைப்போன்றதென்று கூறுவது அரூபமானதென்று அர்த்தத்திலல்ல. காற்றைக்கொண்டு உயிர் வாழலாம், காற்றை அனுபவிக்கலாம், காற்றில் கையளைந்தபடி ஏகாந்த

இருப்பில் இருக்கலாம், காற்றைப் போல் எங்கும் வியாபிக்கலாம், காற்றைப்போல் போராடலாம். ஆனால் காற்று இப்படித்தான் என்று விஞ்ஞான சூத்திரங்களைத் தவிர வேறெப்படியும் விளக்கமுடியாது அனுபவிக்கலாம் அவ்வளவே. கவிதையும் இப்படித்தான். ஒரு கவிதை மாருதமென்றால் இன்னொன்று மந்த மாருதம், வேறொன்று சண்ட மாருதம், மற்றது பிரசண்ட மாருதம், இன்னொன்று புயல், வேறொன்று சூறாவளி இப்படித்தான் கவிதைகளும். காற்று ஒரு பெயர் சுட்டி எப்படி பல வடிவம் கொள்கிறதோ அதுபோல் கவிதையும் ஒருநாமம் பூண்டு பலரூபம் எடுக்கிறது.

அவரவர் தான் வைத்திருக்கும் அளவுகோலால் அளவெடுக்க முடியாது. தான் எழுதியதை வைத்து கவிதைக்கு சட்டவரையறையும் செய்யமுடியாது.

வீராவின் கவிதைகள் வேறொரு வகைக்குள் அடங்கும். பாடலின் தன்மை கொண்டது வீராவின் கவிதை. சிலகவிதைகளை வாசிக்கும்போது அதைப் பாடவேண்டும் போலிருக்கும், இசைச்சொற்களால் ஆனது இவரது கவிதை. இயந்திரத்தன்மை கொண்டு ஒரு சீராக இயங்கும் சொற்களைவிட்டு அசையும் ஆற்றின் தன்மை கொண்டது இவரது கவிதைகள். அதிகமான கவிதைகளுக்கு இவர் அளவுப்பிரமாணம் கொடுத்துள்ளார். அது தான் இசைப்பாடலின் தன்மையைக் கொண்டு தெரிகின்றது. கவிதையில் உச்சத்தை உரசிவிட்டார் என்று கூற நான் தயாராக இல்லை. ஆனால் நாளைய ஒரு நல்ல கவிஞனை "முதன்முதலாய்..." யில் சந்திக்கலாம், என்பது மட்டும் உண்மை. வீராவுக்கு என் வாழ்த்துக்கள்.

அன்புடன்,
புதுவை இரத்தினதுரை,
*பொறுப்பாளர்,*
*விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம்,*
*தமிழீழம்.*

# வரவேற்பதில்...

கலை இலக்கியத்துறையில் மிகுந்த ஈடுபாடும், ஆற்றலும் கொண்ட போராளிக்கவிஞர் வீராவின் படையலிது. இன விடுதலையென்ற அச்சைச் சுற்றியே வாழ்தலைப் புரிந்துகொண்ட இவரது படைப்புக்கள், வெறும் சொற்களின் சித்துவிளையாட்டாகவும், உணர்வுக்கொப்பளிப்புக்களாகவும் அமையாது, வாசகனின் ஆன்மாவரை ஊடுருவக்கூடிய வல்லமையைக் கொண்டுள்ளன. இவரின் கவிதைகள் சில இதை, அடையாளம் காட்டி நிற்கின்றன என்பதை உணரமுடிகிறது.

இவருடைய நண்பர்களின் வித்துடல்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது இவர் படித்த கவிதை வரிகள் வெறும் கண்ணீரை மட்டும் வரவழைக்கவில்லை மக்களின் நெஞ்சங்களில் ஆழப்பதிந்தன. இப்படித்தான் வீரா என்ற கவிஞர் உருவாகினார் என நான் நினைக்கின்றேன். அயராத உழைப்பு, விடா முயற்சி, புதியனவற்றை அறியவேண்டும் என்ற ஆர்வம் இவரின் வளர்ச்சிக்கு வழிவிட்டன.

இசைப்பாடல்கள், கவிதை, கட்டுரை, ஊடகத்துறை எனப்பல்வேறு துறையில் வளர்ந்துவரும் இக்கவிஞரின் படைப்புக்கள் மேலும் வெளிவரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

நன்றி

அன்புடன்
ஞானரதன்,
*பிரதம ஆலோசகர்,*
*ஒளிவீச்சு,*
*நிதர்சனம்.*

இருப்பில் இருக்கலாம், காற்றைப் போல் எங்கும் வியாபிக்கலாம், காற்றைப்போல் போராடலாம். ஆனால் காற்று இப்படித்தான் என்று விஞ்ஞான சூத்திரங்களைத் தவிர வேறெப்படியும் விளக்கமுடியாது அனுபவிக்கலாம் அவ்வளவே. கவிதையும் இப்படித்தான். ஒரு கவிதை மாருதமென்றால் இன்னொன்று மந்த மாருதம், வேறொன்று சண்ட மாருதம், மற்றது பிரசண்ட மாருதம், இன்னொன்று புயல், வேறொன்று சூறாவளி இப்படித்தான் கவிதைகளும். காற்று ஒரு பெயர் சுட்டி எப்படி பல வடிவம் கொள்கிறதோ அதுபோல் கவிதையும் ஒருநாமம் பூண்டு பலரூபம் எடுக்கிறது.

அவரவர் தான் வைத்திருக்கும் அளவுகோலால் அளவெடுக்க முடியாது. தான் எழுதியதை வைத்து கவிதைக்கு சட்டவரையறையும் செய்யமுடியாது.

வீராவின் கவிதைகள் வேறொரு வகைக்குள் அடங்கும். பாடலின் தன்மை கொண்டது வீராவின் கவிதை. சிலகவிதைகளை வாசிக்கும்போது அதைப் பாடவேண்டும் போலிருக்கும், இசைச்சொற்களால் ஆனது இவரது கவிதை. இயந்திரத்தன்மை கொண்டு ஒரு சீராக இயங்கும் சொற்களைவிட்டு அசையும் ஆற்றின் தன்மை கொண்டது இவரது கவிதைகள். அதிகமான கவிதைகளுக்கு இவர் அளவுப்பிரமாணம் கொடுத்துள்ளார். அது தான் இசைப்பாடலின் தன்மையைக் கொண்டு தெரிகின்றது. கவிதையில் உச்சத்தை உரசிவிட்டார் என்று கூற நான் தயாராக இல்லை. ஆனால் நாளைய ஒரு நல்ல கவிஞனை "முதன்முதலாய்..." யில் சந்திக்கலாம், என்பது மட்டும் உண்மை. வீராவுக்கு என் வாழ்த்துக்கள்.

அன்புடன்,
புதுவை இரத்தினதுரை,
*பொறுப்பாளர்,*
*விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம்,*
*தமிழீழம்.*

# வரவேற்பதில்...

கலை இலக்கியத்துறையில் மிகுந்த ஈடுபாடும், ஆற்றலும் கொண்ட போராளிக்கவிஞர் வீராவின் படையலிது. இன விடுதலையென்ற அச்சைச் சுற்றியே வாழ்தலைப் புரிந்துகொண்ட இவரது படைப்புக்கள், வெறும் சொற்களின் சித்துவிளையாட்டாகவும், உணர்வுக்கொப்பளிப்புக்களாகவும் அமையாது, வாசகனின் ஆன்மாவரை ஊடுருவக்கூடிய வல்லமையைக் கொண்டுள்ளன. இவரின் கவிதைகள் சில இதை, அடையாளம் காட்டி நிற்கின்றன என்பதை உணரமுடிகிறது.

இவருடைய நண்பர்களின் வித்துடல்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது இவர் படித்த கவிதை வரிகள் வெறும் கண்ணீரை மட்டும் வரவழைக்கவில்லை மக்களின் நெஞ்சங்களில் ஆழப்பதிந்தன. இப்படித்தான் வீரா என்ற கவிஞர் உருவாகினார் என நான் நினைக்கின்றேன். அயராத உழைப்பு, விடா முயற்சி, புதியனவற்றை அறியவேண்டும் என்ற ஆர்வம் இவரின் வளர்ச்சிக்கு வழிவிட்டன.

இசைப்பாடல்கள், கவிதை, கட்டுரை, ஊடகத்துறை எனப்பல்வேறு துறையில் வளர்ந்துவரும் இக்கவிஞரின் படைப்புக்கள் மேலும் வெளிவரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

நன்றி

அன்புடன்
ஞானரதன்,
*பிரதம ஆலோசகர்,*
*ஒளிவீச்சு,*
*நிதர்சனம்.*

# வார்த்ததில் ...

இது என்னுடைய முதலாவது படைப்பு. இதை நான் கவிதைகள் என்று சொல்லமாட்டேன். அதை உங்களிடமே விட்டு விடுகின்றேன். எனக்கு ஏற்பட்ட உணர்வுகளை இதில் வரிவடிவம் ஆக்கியிருக்கின்றேன் அவ்வளவே. என்னுடைய இந்த "முதன் முதலாய்..." எனும் படையல் இப்படி வெளிவரும் என்று நான் நினைக்கவில்லை. எனது படைப்புகளை நூல்வடிவாக்க, எனது பொறுப்பாளர்கள், போராளி நண்பர்கள், கலை இலக்கிய உறவுகளின் ஊக்கம் தான் முக்கிய காரணியாக அமைந்தது. போருக்குள்ளே எனது வாழ்வியல் இருந்தபடியால் போராட்டம் சார்ந்த படைப்புகளை என்னால் உருவாக்க முடிகிறது. எங்கள் மக்களுக்கும், எங்கள் மண்ணுக்கும், போரியல் ஏற்படுத்திய தாக்கங்களையே இத்தொகுப்பில் என் அறிவுக்கும் அனுபவத்திற்கும் எட்டிய வகையில் சொல்ல முற்பட்டிருக்கிறேன்.

1997ம் ஆண்டு வரலாற்று பெருமை மிக்க எங்கள் தேசிய தலைவரை முதன் முதலாய் எனது கண்களாலும் தரிசிக்கும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. அப்போது நான் அடைந்த ஆனந்தப்பரவச நிலையே எனக்குள் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. அதையே இந்நூலின் "முதன் முதலாய்..." எனும் கவிதையில் கோடிடுகிறேன். அத்துடன் இந்நூலே எனது முதல் படையலென்பதாலும் இத்தொகுப்பு "முதன் முதலாய்..." என்றாயிற்று.

எனது சொந்த ஊரான இனுவில் மண்ணின் ஈர வாசமும், இனுவில் மத்திய கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்களது அன்பும் பாசமும் எனது ஊற்றுக்கண்ணின் திறவு கோல்களாயின. எனது பாடசாலை வாழ்வில் கவிதைகள் எழுதும் ஆர்வம் எனக்கு ஏற்பட்டிருந்த போதிலும், தேசிய விடுதலைப் போராட்டம் எனக்கு உள்ளே மாற்றத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும் அச்சமயங்களில் வெளிவந்த கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதை வரிகள்தான் எனக்குள்ளே தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. போராட்ட கவிதைகளை எழுதத்தூண்டின. இதன் பின் எனது போராட்ட வாழ்வின் ஆரம்பத்தில் இருந்தே எனக்கு அரசியல் துறைப் பொறுப்பாளரின் அறிமுகம் கிடைத்தது.

என்னை இந்த அளவுக்கு ஆளாக்கியதில் பெரும் பங்கானது திரு. சு.ப. தமிழ்ச் செல்வன் அண்ணாவுக்குரியது. நான் எழுதும் ஒவ்வொரு கவிதைகளையும் அவ்வப்போது சுட்டிக்காட்டி விமர்சித்து, "தொடர்ந்தெழுது" என்று தனது வழமையான புன்னகையோடு அவர் தட்டிக் கொடுத்ததுதான் எனக்கும் நம்பிக்கையைத் தந்தது. எமது நிறுவனத்தின் பொறுப்பாளர் சேரலாதன் அண்ணா நான் எடுக்கும் ஒவ்வொரு புதிய முயற்சிகளையும் எவ்வித இடையூறுமின்றிச் செய்ய என்னை ஊக்கிவித்தது மட்டுமல்லாது என்னை வளர்த்து விடுவதில் அதிக அக்கறை காட்டுபவர். இன்று எனது இப்படைப்புக்கள் நூல் வடிவில் வெளிவருகிறது என்றால் அதற்கு முதற்காரணம் அவரே. இது மட்டுமல்லாது எங்கள் ஒளிவீச்சின் பிரதம ஆலோசகராக பணியாற்றிவரும் திரு. ஞானரதன் அவர்களும் என்னை மதிப்பீடு செய்து எனது படைப்புகளின் குறை நிறைகளை எடுத்து கூறிவருபவர்.

இவர்களுடன் எனது அன்புக்குரியவர்களான நகுலன் அண்ணா, கிருபா அண்ணா, சுந்தர் அண்ணா, தவா அண்ணா, வரதன் அண்ணா, யாழ்வீரன் ஆகியோருடன் கலையக நண்பர்களான இசைப்பிரியன், இசைத் தென்றல், இசையரசன், மலையவன், முகிலரசன், காவேரி நாடன், திருமாறன் அனைவருமே அவ்வப்போது என்னை வளப்படுத்தி வருபவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

நிதர்சன நிறுவனத்தின் தர்மேந்திரா கலையகம் வெளியிடும் முதலாவது நூல் என்ற வகையிலும் இந்நூலின் முத்தாய்ப்பான பதினொரு படையல்கள் ஒலித்தட்டு வடிவிலும் வெளிவருகின்றது என்பதும் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது.

இந்நூலுக்காக நான் கேட்ட உடனேயே எழுத்துக்களுக்கு உருவங்கள் கொடுத்து ஓவியங்களாக்கி ஓவியக்கவிதை செய்து தந்த எங்கள் நிறுவனத்தின் ஓவியர் திரு. சு. ராஜன் ஆசிரியர் அவர்களுக்கும், இந்த படையல்களை சிறந்த முறையில் இதழாக்கித் தந்த நிலா பதிப்பக பணியாளர்களுக்கும் அதனுடைய உரிமையாளர் பாசத்துக்குரிய அன்ரனி அண்ணா அவர்களுக்கும், இதழ்வடிவமைப்பில் உதவிய வெளிச்சம் ஆசிரியர் கருணாஅண்ணா அவர்களுக்கும் எனது நன்றிகள்.

இந்நூலுக்கான ஒளிப்படத்தையும் முகப்பமைப்பையும் செய்து தந்த எனது அருமை நண்பர் செந்தோழன் அண்ணா அவர்களுக்கும் எனது நன்றிகள்

தாங்கள் வாழும் போராட்டச் சூழலில் ஏற்படும் மாற்றங்களைப் பதிவு செய்ய வேண்டியது ஒவ்வொரு கலை இலக்கியப் படைப்பளிகளது கடமையுமாகிறது. அவ்வகையில் எத்தனையோ படைப்பாளர்கள் இந்தப்பணியைச் செவ்வனே செய்து வருகிறார்கள். இன்னும் எத்தனையோ இளம் படைப்பாளர்கள் இலைமறை காயாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் சரியான களம் கொடுக்கப்பட்டு இன்னும் ஏராளமான நூல்கள் வெளிவரவேண்டும். என்போன்றவர்களுக்கு ஒன்று சொல்வேன் சந்தப்பங்களுக்காக காத்திராது நீங்களே சந்தப்பங்களையும் உங்களுக்கான களங்களையும் உருவாக்கி கொள்ளுங்கள் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.

உள்ளே உள்ளவை பற்றி நான் எதுவுமே சொல்லவில்லை. எனது உணர்வுகளை காட்சிக்கு வைத்திருக்கின்றேன் அவ்வளவுதான். எனது இந்த முயற்சியின் படையலை உண்டபின் உங்களுக்கு ஏற்பட்ட உவகையையும், உறுத்தலையும் என்னுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். எனது இந்த "முதன்முதலாய்..." உங்களுக்கு முழுமனதாயா? இல்லை முள்முள்ளாயா? உங்களுக்காய் காத்திருக்கிறேன்.

நன்றி.

என்றும் அன்புடன்
உங்கள்
வீரா

*நிதர்சனம்,*
*திருநகர்.*

# மாவீரம்

“மண்ணெழுதிப் போகிறதுங்கள்
உயிர்வாசம் - அதை
மனசுள்ள கவிதையெல்லாம்
தினம் பேசும்
கண்ணிமைகள் நீராலே
கோலம் போடும் - எம்
காவியத்து நாயகரே
உம்மைப் பாடும்”

வற்றாத ஊற்றுகளே
வாசனையின் காற்றுகளே
சொற்பொருளாய் மிளிரும்
பொன்மணிகளே - எங்கள்
தற்பெருமை காக்க
தலைவன் வழிநடந்த
நற்தமிழ்ச் செல்வங்களே
ஈழநாடே உங்களுக்கு
இது காப்பு.

உயிர் என்ப தொன்றும்
உங்களுக்கு பெரிதில்லை
துயர் மீண்டு நாம் வாழ
உமை ஈந்தீர் பொய்யில்லை.

இளமைக் கனவுகளைத் துறந்து
இதயத்தில் விடுதலையை சுமந்து
வழமையான வாழ்வின்றிப் போரின்
வாசலுக்குள் கால்வைத்த வீரர்கள் .

நிலமே உங்களது மூச்சென்று
நெஞ்சில் வைத்தீர்கள் பூச்செண்டு
பலமே எங்களுக்கு நீரானீர்
பைந்தமிழீழத்தின் வேரானீர்.

கண்களில் எப்போதும் விடுதலை
கனவிலும் சுமந்தீர்கள் எங்களை
மண்ணெனப்படுவது மானம்தான்
மகிழ்வோடு போரிட்டீர் தியாகம்தான்.

பகைவரை கூட்டோடு அழித்து
பலமாகி மீண்டும் முளைத்தீர்கள்
தலைவனை மனசுக்குள் நினைத்து
தாயக வேள்வியில் உயிர்த்தீர்கள்.


உங்களை நினைத்தாலே வீரம் வரும்
உள்ளத்தில் உம்பிரிவால் ஈரம் வரும்
மங்காத மாபெரும் தத்துவங்கள்
மதிப்புள்ள வரலாற்றுப் புத்தகங்கள்.

சண்டைக் களங்களில் குருதியாறு
சாவிலும் உங்களில் உறுதியாறு
இண்டைக்கும் இழப்புக்கள் குறைவில்லை
ஏனின்னும் விடுதலையோ வரவில்லை.

கல்லறைக் கோவில்களில்
கண்கள்தான் மூடினீர்கள்
கனவுகளில் தேசத்தின்
விடிவையெண்ணி வாடீனீர்கள்.

கார்த்திகை இருபத்தேழு
மட்டும்தான் உங்களுக்கல்ல
போர்நிலத்து தமிழரெல்லாம்
பூப்போடுவது தினமுந்தான்.

தமிழீழ வரை படத்தில்
தரைத்தோற்றம் தெரிவதில்லை
எப்போது பார்த்தாலும்
உங்கள் முகம் மறைவதில்லை.



# எங்கள் வாழ்க்கைப் பிரபந்தம்

"பூக்கள் எல்லாம் தாமாய் சேர்ந்து
மாலைகள் ஆகின
புழுதி படிந்த மண்ணில் மழையோ
பன்னீர் தூவின
தூக்க விழிகள் இமையை விலத்தி
துணிவு பெற்றன
துடிக்கும் இதய ஓசைகளில் ஒரு
பெயரே ஒலித்தது.

பிரபாகரன் எனும் திருநாமம் - அட
பிரபாகரன் தானே தமிழ்மானம் "

உலகத்தமிழர் இதயப் பூவில்
வாசம் செய்யும் மகரந்தம்
உணர்வுத்தமிழா தலைவா நீதான்
எங்கள் வாழ்க்கைப் பிரபந்தம்.

தாய்மை கொண்டு தேசம் தந்த
தலைவன் எங்கள் வரலாறு
வாய்மை போற்றும் வடிவே உனக்கு
வயது என்றும் பதினாறு.

கால நதிகள் ஓடும் ஓடும்
காலம் முழுதும் நீ வாழ்வாய்
ஈழ விடிவில் ஏறும் கொடியை
ஏற்றும் உயிரே நீ வாழ்வாய்.

சின்னக் குழந்தை சிரிப்பைக் கூட
ரசிக்கும் நல்ல கலைஞன் - இவன்
எண்ணம் முழுதும் உதிக்கும் எதுவும்
ஈழம் மீட்கும் பணிகள்.

தெய்வம் என்றும் புகழ்தல் வேண்டாம்
தேரில் நீயும் வருவதில்லை.
தேவன் என்றும் மொழிதல் வேண்டாம்
சிறகு எதுவும் தெரிவதில்லை.

கைகள் கொண்டு கண்ணீர் துடைத்தாய்
கவலை வென்றோம் பொய்யில்லை.
ஐயா! தலைவா உனக்குள் வாழும்
மனிதம் பாடச் சொல்லில்லை.

பணமோ புகழோ பதவிச் செருக்கோ
பக்கம் கூட வந்ததில்லை.
பணிவும் துணிவும் உனக்குள் வளர்த்தாய்
பயத்தால் என்றும் நொந்ததில்லை.

நிலமும் இனமும் நிமிர்வைக் காண
நீயே எழுந்தாய் நிகரில்லை.
உலவும் காற்றில் உரத்துச் சொல்வோம்
இனிமேல் எமக்கு துயரில்லை.

உலகத் தமிழர் இதயப் பூவில்
வாசம் செய்யும் மகரந்தம்.
உணர்வுத் தமிழா தலைவா நீதான்
எங்கள் வாழ்க்கைப் பிரபந்தம்.

## புத்தரைக் கண்டால்...

"ஆசிய ஜோதியான
அகல்விளக்கே
அன்பையே அகிலமென்ற
விடி கிழக்கே
பேசிய புன்னகையும்
பௌத்தம்தான்
பெரியவரே இன்றேனோ
வருத்தம் தான்"

புத்தரே!
வணக்கம்
எப்படி நலமா?
நீங்கள் நல்லவர்
கொல்லாமை என்கின்ற
குறிக்கோளை போதித்துவாழ்ந்தீர்கள்
ஆனால் அது இன்று
கல் ஆமையாகி நகரவேஇல்லையே
பௌத்தம் என்னும் உயர்ந்த
கோட்பாடு இப்போ
சவச்சாலைகளில்
கூட பேணப்படவில்லையே
பிறகெப்படி
சந்நிதிகளில்?

புத்தரே!
நீங்கள்
நல்லவர்
ஒருநாள் இளவரசன்
மறுநாளே ஞானத்துறவி என
மனதை கட்டுக்குள்
வைத்திருந்த உங்கள் வாழ்வு
மூப்பு எப்படி வருகிறது
என்று கேட்டே
முக்தி நிலை பெற்றவர் நீங்கள்
“இறப்பில்லா வீடொன்றில்
கடுகு எடுத்துவா ” என்று
வாழ்வின் நிலையாமையை
உலகிற்கு சொன்னவர்.

ஆனால் உங்கள்
வழித்தோன்றல்களோ
அதைத் தவறாக
அர்த்தப்படுத்திக் கொண்டார்கள்
எதுவும் நிலையில்லை
என்றபடி அவர்களே
அவசரமாய் அழிக்கிறார்கள்
தாங்களும் அழிகிறார்கள்.

நீங்கள் ஞானம்பெற்ற
போதிமரம்
இங்கே
விறகுக் கடையில்
விற்பனையாகிறது
இனவாதத்தின்
மேல்நின்று
மதவாதம் ஆலவட்டம்
பிடிக்கிறது.

உங்கள் பெயர்சொல்லித்தான்
எல்லோரும் அணிவகுக்கிறார்கள்
ஆனால் உங்களையே
மறந்துவிட்டு
எங்களோடு மல்லுக்கு நிற்கிறார்கள்.

உயிர்களிடத்தில்
அன்பு வையுங்கள்
உத்தமரே சொன்னீர்கள்
உயிர்களையாவது
விட்டுவையுங்கள்
அவர்களிடம் நாங்கள்
கேட்கிறோம்.

அரசமரம் உள்ள
இடமெல்லாம் அவர்களதாம்
அதெப்படி புத்தரே
மரங்களைப் பேணி
மனிதர்களை அழிப்பதாய்
பாதை மாறிப்போனது
இந்த மதப்பயணம்?

எங்களோடு ஓயாத போர்தான்
பறவாயில்லை
உங்களை வணங்கிறார்கள்
பூவைக்கிறார்கள்
ஆனாலும்
அவைகளிலும்
மகரந்தங்களுக்கு பதிலாய்
குருதித் துளிகளல்லவா
ஏன்?

எங்களைச் சுடவரும்
ஒவ்வொரு ஆமியின்
சட்டைப் பையிலும்
புன்னகைத்த உங்கள் படம்
வேடிக்கை புத்தரே

புத்தம்
சங்கம்
தர்மம்
எல்லா கச்சாமிகளும்
இங்கே
ஆமிகளாய் மட்டும்தான்

இதில் இடைத்தரகர்களாய்
சில பிக்குகள்
அவர்களில் பலர்
காவியுடை அணிவதனால்
மனசிலும் கறை படிந்தவர்கள்
உயிர்களை அழிப்பதற்கான
அனுமதிப் பத்திரமாய்
ஆசீர்வாதம் வழங்குவது
அவர்கள் தான்
தலையை வழித்துக்கொள்கிறார்கள்
ஆனால்
இனவாதத்தை மட்டும்
வளர்த்துக் கொள்கிறார்கள்
இவையெல்லாம் ஏன்?
ஆனால் புத்தரே!
நீங்கள் நல்லவர்.

எங்கள் தலைவன்
பிரபாகரன்
மனிதன் தான்
ஆனால் அவரை பலர்
தெய்வமாக நினைக்கிறார்கள்
நான் ஒப்பிடவில்லை
ஆனால் கேட்கிறேன்
கௌதம புத்தரே
நீங்களும் தெய்வம்தான்
ஆனால் உங்களை
மனிதனாக கூட
அவர்கள்
பேணவில்லையே
ஏன்?

சிங்களவர்களை நாங்கள்
உறவுகளாய் - ஆனால்
அவர்கள் எம்மை
விறகுகளாய்.........
எங்களை விடுங்கள்
புத்தரே!
நாங்கள் எப்படியும்
தலைநிமிரத்தான்
போகிறோம்.

ஆனால் அங்கே
விகாரைகளோ
விவகாரமாகிறது
துறவு வாழ்க்கை
மாறுவேசமாகிறது
இனவாதம் மட்டுமே
இதயங்களை இயக்கிறது
மொழி என்னவோ சிங்களம்தான்
ஆனால் பிரயோகிப்பது
ஆயுத எழுத்து மட்டுமே
இப்படியே
கொஞ்சம் கொஞ்சமாக
புத்தம்
அங்கே
செத்துப்போய்க்கொண்டு
இருக்கிறது..............

அன்பே வடிவமான
புத்தரே!
நீங்கள் மீண்டும்
இங்கே வரவேண்டும்
உங்கள் கோட்பாடுகளின்
சரியான விளக்கத்தை
அவர்களுக்கு தரவேண்டும்

மன்னிக்கவும்
இதுவும்
இலங்கையின்
வேண்டுகையல்ல
ஈழத்தமிழர்களின்
விண்ணப்பம்.



## வீரத்தாய்

குழந்தை அழுகிறது
தாலாட்டுப் பாடவில்லை
முலை கொடுத்த அன்புத்தாய்
முதுகுதட்டிச் சொல்கிறாள்...........

இளம் தளிரே என்குழந்தாய்
களம் செல்லப் புறப்படு
வளம் மிக்க பூமியில் - பகை
தளம் அமைக்க வருகிறது
தடுத்து நீ போர் செய்
அடுத்தொருவன் பிறந்திருந்தால்
அவனும் உன் அருகிருப்பான்

ஆயுதத்தை ஏந்திக்கொள்
அதிரடிக்குத் தயார் செய்
அன்னியனின் படை இங்கு
அழியட்டும்! அழியட்டும்!

கண்மணியே,
பசிக்கிறதா
படலை முன் பகை வருகையில்
பசி உனக்கு இருக்கலாமா?

மாவீரன்
உன் அப்பா
படுகளத்தில் விதையானார்
ஆனாலும் பகை வருதே
பச்சிளம் குழந்தாய் - எதிரியை
பிச்செறி களம்போய்
பாலகன் தான் நீ
ஆனாலும் தமிழன்
புலிக்குகையாம் - என்
உதிரத்தில் உதித்தாய்
வலுவான உறுதிகொள்
அன்னியனை அழித்துவிட்டு
அன்புத்தாய்
என்னிடம் வா
அன்று உனக்கு தாலாட்டு.

குழந்தை அழுகிறது
தாலாட்டுப் பாடவில்லை
முலை கொடுத்த அன்புத்தாய்
முதுகு தட்டிச் சொல்கிறாள்...........

# அக்கரை மேல் அக்கறையாய்...

பூநகரி
கல்முனைக் கரையில்
இருந்து
கடல் தாண்டிப் பார்க்கின்றேன்
ஆடும் அலையின் மேல்
அண்ணாந்து பார்க்கிறேன்
அதோ தெரிகிறது
எனது ஊர்.

ஓங்கி வளர்ந்த பனைகள்
உயர்ந்த உயர்ந்த தென்னைகள்
தாங்கி நிற்கும் என் மண்
தனிமைப் பட்டு நிற்கிறது.
அதனுள்ளே இப்போ
என்ன நடக்கும்
அடிக்கடி அவலம்
நடக்கும்.

நாய்ச் சத்தம் - பின்
“சூ” சத்தம் என
எல்லாம் கேட்கும்
இனிமைத் தமிழ்
எம்மண்ணில்
“எண்ட எண்ட”
ஏதோ கேட்கும்.

பூத்துக்குலுங்கும்
இளம் பூக்கள்
வேர்த்துப் போய்
பார்த்து இருக்கும்
பள்ளிசெல்லும்
பால் நிலாப்
பிள்ளைகள் எங்கே?
பெயர் தெரியா பிணங்களாகி......
எல்லை தாண்டி
வந்தவனுக்கு
முல்லை என்ன
முள்வடலி என்ன
எல்லாம் ஒன்றுதான்
ஏக்கமுடன் துறவாய்
தூக்கமின்றிய இரவுகள்.

வீட்டுக்குள் இருந்தபடி
வெளிச் சொல்லா முணுமுணுப்பு
ம்...............
என்செய்ய
இவ்விடர் என்று தீரும்
என் உறவுகளுடன்
அன்றைய நாட்கள்
எப்படி? எப்படி?

இனிய இனிய கனவுகள்
கனிமையான உறவுகள்
தாய் நிலத்தில்
சேய் நாங்கள்
சிறப்போடு வாழ்ந்த வாழ்வு
இனி என்று வரும்.

கண்கள் கண்ணீரால்
கரை புரண்டன
ஏனோ
அவை எனக்கு
முன் நிற்கும் கடலை விட
பெரிதாய்...........
இது மாறுமா?

ஓ!
விசிலடித்து விட்டது
அணியாகும் நேரம்
ஆம்
இம்மண்ணில்
எழுந்த பகையை
எரிக்கும் திட்டமுடன்
சிறப்புப் பயிற்சி ஒன்றில்
நானும் ஒருவனாய்............
அக்கரை மேல் அக்கறையாய்
அணி நகர்கிறது.



# இதுதானெம் ஈழமணித் திருநாடு

"அன்னை தேசமே அன்னை தேசமே
உன்னைப் பாட மறப்பாரா
ஆளும் தமிழர் காலம் வரையில்
ஓய்வாய் யாரும் இருப்பாரா
கையில் கொஞ்சம் அள்ளிப் பார்த்தால்
கவிதை நெஞ்சில் வழியுமே
காதல் கொண்ட உன்னைக் கண்டு
மேகம் கூடப் பொழியுமே".

முலைப் பாலாய் வழிந்தோடும் நதிகள்
முத்தத்தின் எச்சிலாய் குளங்கள்
கலை ஞான ஜதியோடு கடல்கள்
கண்ணுக்கு விருந்தாகும் வயல்கள்
இலை காயால் நிறைகின்ற வனங்கள்
இடரென்றால் உதவுகின்ற மனங்கள்
இதுதானெம் ஈழமணித் திருநாடு
இதைமீட்கத் தானே இந்தப் பெரும்பாடு.

பூக்களில் வண்டுகள் கவியெழுதும்
புன்னகை மரங்கள் அழகெழுதும்
பாக்களை பாடுவது கவிஞரென்றில்லை
பறவைகள் குரலிலும் அதுஇருக்கும்
தூக்கிய கைகளில் உழைப்பின் ரேகை
துணிவுதான் எம்மவர் வாழ்க்கைப் பாதை
இதுதானெம் ஈழமணித் திருநாடு
இதை மீட்கத்தானே இந்தப் பெரும்பாடு.

பார்க்கின்ற இடமெல்லாம் பசுமையின் புரட்சி
பலம்தானே எம் அடிப்படை திரட்சி
வேர்க்காத மனிதராய் இங்கெவரும் இல்லை
விடியாத கிழக்கா ஒருபோதும் இல்லை
போர்க்காலில் நசிபட்டு வாழும் போதும்
புன்னகை சிந்தாத முகங்களில்லை
இதுதானெம் ஈழமணித் திருநாடு
இதைமீட்கத்தானே இந்தப் பெரும்பாடு.

ஆறாத சோகம் அனைவருக்குமுண்டு
ஆனாலும் வாழ்கையில் நம்பிக்கையுண்டு
மாறாத கொள்கை மண்ணுக்குமுண்டு
மலையான உறுதி மடுவுக்குமுண்டு
பாலாறு பாய்கின்ற சொர்க்கம் தானிங்கே
பண்புள்ளோர் எல்லோரெனும் வர்க்கம்தானிங்கே
இதுதானெம் ஈழமணித்திருநாடு
இதை மீட்கத்தானே இந்தப் பெரும்பாடு.

மாபலா தென்னைகள் மடிகொண்ட பூமி
மடைதிறந்த வெள்ளமாய் வரந்தரும் சாமி
தேன்நிலா இங்கே தித்திக்கும் நேரம்
தினந்தோறும் கவிதைகள் ஆயிரம் ஊறும்
வான்மகள் பொய்க்காத வளமான தேசம்
வரலாறே எம்வேரின் வலிமையை பேசும்
இதுதானெம் ஈழமணித் திருநாடு
இதை மீட்கத்தானே இந்தப் பெரும்பாடு.

முட்கம்பி வலைக்குள்ளே சிறைவாழும் மண்ணே
முகம்திரும்ப முடியாமல் துடிக்கின்ற மண்ணே
கட்டடங்கள் காடுவயல் பலகொண்டு நின்றாய்
கலைஊறி அதற்குள்ளும் உயிர்ப்போடுநின்றாய்
தொட்டழைந்து நாம் விளையாடினோம் உன்னை
தொல்காலம் முதல் தாங்கும் இந்த அன்னை
இது தானெம் ஈழமணித் திருநாடு
இதை மீட்கத்தானே இந்தப் பெரும்பாடு.

அலைவீசும் கடல்தானே உனைச்சூழ
அழகான தமிழ்தானே நீவாழ
நிலையான தென்றால் நிலம்தானே ஞாபகம்
நெஞ்செல்லாம்தேசத் தாயே உன் பூமுகம்
விலையிலா உயிராகத் தமிழர்கள் போற்றும்
விடுதலைப் பயிராக வீரர்கள் சாற்றும்
இதுதானெம் ஈழமணித் திருநாடு
இதைமீட்கத்தானே இந்தப்பெரும்பாடு.

எறிகணைகள் விழுகின்ற இதயம்தான்
எப்போதும் போராட்டத் தடயம்தான்
பிறிதொன்றாய் பகைவந்தால் மரணம்தான்
பெயர்சொல்லும் வீரத்தின் பயணம்தான்
குறிதவறாக் கோட்பாடாய் தமிழீழம்
கொண்டவர்கள் வாழ்கின்ற நிலமாகும்
இதுதானெம் ஈழமணித் திருநாடு
இதைமீட்கத்தானே இந்தப் பெரும்பாடு.

சத்தியத்தை காக்கின்ற சமர்நிலம்
சாவிலும் விடிவினையே சொல்லும் இனம்
சுத்திவர பகைவர்கள் நிற்கும் கூடு
சூரியனே இங்குவந்து ஆடும் வீடு
நித்திரையை சுகம்கொள்ள நேரம் இல்லை
நினைத்தாலும் கண்ணிலந்த ஈரம் இல்லை
இதுதானெம் ஈழமணித் திருநாடு
இதைமீட்கத்தானே இந்தப் பெரும்பாடு.

பனித்துளிகள் புல்மீது தவமிருக்கும்
பயணிக்கும் ஒளிக்கீற்று அதை தழுவும்
இனிக்கின்ற கற்கண்டாய் எல்லாமுண்டு
இசைபாடும் ஆறுகள் இங்கேயுமுண்டு
தனிப்பட்டு நின்றாலும் தமிழரது சொத்துத்தான்
தாயகம் என்பது மனிதனுயிர்ச் சத்துத்தான்
இது தானெம் ஈழமணித் திருநாடு
இதைமீட்கத்தானே இந்தப் பெரும்பாடு.



# வேண்டும்

காலம் முழுதும் கவிதை வேண்டும்
கண்ணீர் துடைக்கும் விரல்கள் வேண்டும்
ஈழம் இன்றே விடிதல் வேண்டும்
எங்கள் வாழ்வும் நிறைதல் வேண்டும்
காற்றைக்கூட பிடிக்க வேண்டும்
கடலைக்கூட குடிக்க வேண்டும்
நேற்றுப் போன நாளும் வேண்டும்
நிலத்தில் மீண்டும் அமைதி வேண்டும்
வானம் எங்கள் வசமாய் வேண்டும்
வாழும் காலம் வளமாய் வேண்டும்
மானம் ஒன்றே பெரிதாய் வேண்டும்
மற்றைய தெல்லாம் அதுவே வேண்டும்
மானம் ஒன்றே பெரிதாய் வேண்டும்
மற்றைய தெல்லாம் அதுவே வேண்டும்.



## உருமறைப்பு

பௌர்ணமியை
கருமேகம் சூழ்வதுபோல்
பவள முகத்தில்
கரிப்பூச்சுகள்
பதுங்கித் தாக்கும்
பெண் போராளியின்
பகைக்கு முன்னான
உருமறைப்பு.



# கரும்புலிகள்

நெருப்புத் தாயின் நெஞ்சில் பிறந்த
சிறப்பு அவர்க்குண்டு - அந்த
பொறுப்பை கொண்டு தேசம்வெல்ல
இறக்கும் மனமுண்டு.

புல்லில் கூட நிமிர்வு பிடிக்கும்
பூவில் கூட மலர்வு பிடிக்கும்
சொல்லில் கூட கவிதை பிடிக்கும்
சோகம் கண்டால் நெஞ்சு துடிக்கும்.

கவலை கடலாய் பொங்கும் போதும்
மூழ்கி நீந்தி வெளிவருவார்
கண்ணீர்த் துளியை சிந்தும் போதும்
கையால் துடைத்து உலாவருவார்
சோக வாழ்வை சுமந்த தோள்கள்
சோகமே வாழ்வாய் நினைக்காது - அவர்
வேகும் தீயில் நின்ற போதும்
உணர்வுகள் மட்டும் எரியாது.

தலைவன் பேரில் கடிதம் தீட்டும்
போதே கரும்புலி ஆனவர்கள்
தமிழை தாயை மண்ணை எல்லாம்
நெஞ்சில் தாங்கும் ஈழவர்கள்
உறவுக் கடலில் தினமும் குளித்து
அன்பைச் சுமந்து போனவர்கள்
உயிரின் திரியை தீயில் நனைத்து
சூரியத் துளிகளாய் ஆனவர்கள்.

வாழும் ஆசை அவர்க்குள் உண்டு
வாலிப மோகம் அன்பும் உண்டு
நாளும் சாகா நிலைவர வேண்டியே
அவர்கள் சாகும் வடிவினை வேண்டினர்.

வெடியைச் சுமந்து தோழன் போனால்
பொறாமை எண்ணம் அவர்க்கு வரும்
வெடித்த சேதி காதில் சேர
பொங்கி அழுகை நெஞ்சில் வரும்
வீரம் காதல் சோகம் எல்லா
உணர்வையும் கொண்ட கலவைகள்
விரைவில் தேசம் விடிந்திட எண்ணி
வெடியைச் சுமக்கும் மழலைகள்

ஈழதேசம் உயிராய் வேண்டும்
இங்கு வாழும் உரிமை வேண்டும்
காலநதியில் கரையாதி ருக்கவே
களத்தில் அவர்கள் வெடித்திட வேண்டினர்.



## ஏக்கமுடன்...

*வெள்ளைப் பட்டுடுத்து
வீசும் மணம் பரப்பி
பிள்ளைகளை மகிழ்விக்கும்
மல்லிகை நான்
என்ன?
என்குரல் கேட்கிறதா?
இன்று நான் மொட்டுத்தான்
நாளை மலரப் போகிறேன்
என் ஏக்கம் புரிகிறதா?*

நாளை
கார்த்திகை 27
மண்ணுக்காய் உயிரீந்த
மறவர்களின் திருநாள்

எல்லோரும் அந்நாளில்
இவர்களையே நினைத்திருப்பர்
நான் என்ன
விதிவிலக்கா
எங்களுக்காய் வித்தானவர்களுக்கு
நானும் தான் என்ன செய்ய?

ஓ!
எங்கே போகிறீர்கள்
நாளை காலைவந்து
நாயகர் தம் கல்லறையில்
எனைப் பறித்து வைப்பீர்களா?
பரவசமுடன் பூத்திருப்பேன்
என்ன?
செய்வீர்களா?



## சோதிபெறும் சுதந்திரம்

விடுதலைத் தீயோ
வேகும் உன் நெஞ்சோ
புயல் மறவா
புனிதப் போரில் கிளர்ந்தெழுவாய்
கிலி கொள்வான் பகை.

ஆறுதல் உரையோ
அஞ்சலி நிகழ்வோ
அது போதும்
சீறிடும் புலியாய்
செருசெல் புயலாய்
சிதறி ஓடும் பகை.

தேடி வரும் அழிவோ
தேய்ந்து விடும் நிலவோ
ஓடி வருவாய்
ஒரு வரலாறு எழும்
வாடி வதங்கிடாது
வராது கொல்வாய் பகை.

தாயகத்து பிளவோ
தமிழ் நிலத்தில் அழிவோ
பேயிருக்கும் புலவோ
பேதமையின் வளவோ
ஓயாத புலியே எழுவாய்
ஓடி ஒளியும் பகை.

சேதி சொல்லும் உலகம்
செருவில் வெற்றி நிகழும்
நாதியற்ற படை
நாறிப்போய் அழியும்
சோதி பெறும் சுதந்திரம்
சுடர் விடும் நிரந்தரம்.



# எச்சங்கள்

ஆதிக்கப் பேய்கள் கலைக்கப்பட்டு
என் ஊர் மீட்கப்படுகிறது
நான் வியர்வை சிந்தி
உழைத்து கட்டிய வீடும்
அங்குதான்
மீட்கப்பட்ட மகிழ்வில்
ஓடிப்போனேன்
என்வீட்டு மண்ணை
முத்தத்தை
அள்ளி கொஞ்சவேணும்
ஆசை எனக்குள்ளே

வீட்டு வாசலை அடைந்தபோதே
"கவனம் மிதிவெடிகள்"
அபாய அறிவிப்பு
கண்ணீர் பார்வையை மறைக்க
தொலைவில் இருந்தபடியே
என் வீட்டு தரிசனம்

சே!
என் நிலத்தில்
என் கால்கள்
பயணம் போகாதபடி
பகைபோட்ட எச்சங்கள்.

# தமிழா எழடா புலியாய்....

“அணியாக வாருங்கள் தமிழர்களே
அழகான தாய்மண்ணை காத்திடுவோம்
பணிதானே இதுநமது ஒவ்வொருவருக்கும்
பலமோடு சேருங்கள் வெற்றியிருக்கும்.”

அடடா தமிழா எழடா புலியாய்
அழிவார் பகைவர் தெருவாய்
கொடடா உயிரை கொல்வாய் பகையை
குவலயம் போற்ற வாழ்ந்திடுவாய்
எடடா வாளை எரிவார் கோழை
எனவே நீயும் எழுந்திடுவாய்
தொடடா தமிழை துவளா இனமே
தூமணியாகவே ஒளிர்ந்திடுவாய்

விடிவா மளவும் அணையா விளக்கின்
வடிவானவர்கள் தமிழர் என்பேன்
கடிதில் விலகா கரிய புலியால்
விடியும் தேசம் தமிழன் என்பேன்
படியாய் உரமாய் பலமாய் திடமாய்
பகர்வான் தலைவன் தமிழன் என்பேன்
கொடிய பகைவர் கதையை முடிக்கும்
கொள்கை உள்ளவன் தமிழன் என்பேன்

அருமைத் தமிழா அனலாய் எழுவாய்
அல்லும் பகலும் உழைத்திடுவாய்
பெருமை கொள்வாய் பெரியோன் உள்ளான்
பெயர்ப்பாய் பகைவர் பேதமையை
கருவாய் உருவாய் தமிழின் ஒளியாய்
இருப்பானெங்கள் தலைவன் என்பேன்
திருவாய் சொல்வேன் ஈழம் மலரும்
திசைகள் வெளிக்கும் உறுதியென்பேன்

அலையாய் திரள்வாய் பகைவர் புரள்வார்
அறிவாய் தமிழா எழுவாய்
மலையாய் வரினும் தலையாய் எழுவாய்
மானம் பெரிதே எழுவாய்
விலையாய் உயிரை கொடினும் விரைவாய்
வருவாய் தமிழா எழுவாய்
நிலையால் நிமிரும் கலையால் வளரும்
தமிழர் தேசம் எழுவாய்

தணலாய் எழுவாய் புயலாய் புகுவாய்
தமிழா புலியாய் உணர்வாய்
மணலாய் இருந்தாய் மதியால் அறிந்தாய்
புரிவாய் பணியை உணர்வாய்
கனலாய் விழிகள் தெறிக்க கருவாய்
ஈழம் பிறக்கும் உணர்வாய்
சினமாய் எழுவாய் செருசெல் புலியாய்
மறவா தமிழா உணர்வாய்

தனியே நிற்பினும் தலைகுனியாது
தாவியே தமிழா வருவாய்
உனையே நம்பி உயிர்பல உண்டு
உயிர்ப்புடன் எழுவாய் தமிழா
கணையாய் கனலாய் காவியம் எழுதி
களமே காக்க வருவாய்
பனியை விலக்கும் ஒளியாய் படர்வாய்
பகையை விரட்டியே தொடர்வாய்

கோரமுகத்து படையை அழிக்க
கொள்கையாளனாய் வருவாய்
நேரமிருக்கு நீறுள் நெருப்பு
நிலையறிவாய் நீ வருவாய்
போரில் பொருது புயலாய் உரசு
பூவாய் இருந்தாய் எழுவாய்
பாரில் வெல்வோம் பகையைக் கொல்வோம்
பாராய் தமிழா எழுவாய்

இடியா வானில் எழுமா மின்னல்
இதயத்தில் விழுமா கன்னல்
துடியாதிருப்பினும் படையாய் எழுவாய்
துயரம் நீங்கும் உணர்வாய்
படியாதவர்கள் பலராய் அறிவாய்
பகையால் வருதே எழுவாய்
கொடிதான் உயரும் கொடுங்கோல் அழியும்
கோசம் வெல்லும் வருவாய்

நாளும் பொழுதும் நாமும் அழுதும்
நாறிக் கிடந்தது போதும்
சூழும் பகையை வெல்லும் வகையை
சொல்வேன் உடனே எழுவாய்
தோழைக் கொடுப்பாய் துயரம் துடைப்பாய்
தோழா புலியாய் எழுவாய்
வாழும் பின்னும் வரலாறிருக்கும்
வருவாய் தமிழா எழுவாய்.

வானம் சிலிர்க்கும் வையம் புலரும்
விரைவாய் ஈழம் மலரும்
தானம் சிறக்கும் தருணம் பிறக்கும்
விரைவாய் ஈழம் மலரும்
மானம் பெரிது மலையாய் கருது
விரைவாய் ஈழம் மலரும்
கோனும் சிறக்கும் கொடியும் அசையும்
விரைவாய் ஈழம் மலரும்.



## நான் உன் பின்னவன் தான்

*மார்கழிப் பனிப்பூவில்*
*மையிருட்டில் நனைந்து கொண்டு*
*கார்குழலி ஒருத்தி*
*கவனமாக செல்கிறாளே.........*

மார்பளவு தண்ணீரில்
மறைந்து சென்று மடுகடந்து
பேர்தெரியா பேயிருக்கும்
பெருங்காவல் நிலைகடந்து
சீர்வரிசை இள வயதில்
செருப்புமின்றி பெரும் பற்றை
கோர்வைக்குள் "குறோள்" இழுத்து
கொடும் பகைவர் கோட்டையினை
பார்வைக்குள் சிறைப்படுத்தி
பத்திரமாய் முகாம் திரும்பி
போர்த் திட்டம் தீட்டிவிட்டு
பொலிவாய் முகம் காட்டிவிட்டு
ஆர்.பி.ஜியுடன் அனைத்தும் கொண்டு
அழகு விழியில் வீரம்கொண்டு
ஊர்மிதித்த பகைவர்களை
உலைக்களத்தில் எரியவிட்டு வெற்றிபெற்று
சீர்வரிசைகள் ஏற்றி
செழும் நெற்றி திலகமிட்டு
வந்திடுவாள் எமதன்புச்
சகோதரிதான்.

நன்றிசொல்வேன் ஈழமகளே
நம் தேசத்தாயின்
உதிரத்தில் உதித்தமைக்கு
நன்றி சொல்வேன்
நான் உந்தன் பின்னவன்தான்

மார்கழிப் பனிப்பூவில்
மையிருட்டில் நனைந்துகொண்டு
கார்குழலி ஒருத்தி
கவனமாக செல்கிறாளே................

# காற்றுள்ளும் ஒரு வேகம்

தென்றல்
மூச்சுக் காற்றின்
மென்மை வடிவம்
அனுமதி கேட்டு
உள் நுழையும் நண்பன்
வெகுமதி கேட்காத
விருப்பமுள்ள விருந்தினன்
காதலுக்கு தூதுசெல்லும்
கைங்கரியம் செய்பவன்
வாச மலர்களிலும்
வாசம் செய்பவன்
தேசம் முழுவதிலும்
பூசி நிற்பவன்

தென்னங் கீற்றினூடே
தேம்பாக உரசுவான்
சின்னக் குருவிகளின்
சிறகடிப்பில் வருபவன்
வண்ணக் குழல் ஓசையால்
வருடியும் செல்வான்
தண்மை பெற்று அவன்வந்தால்
தனிச்சுகமே கிடைத்துவிடும்
ஆனால் இன்று
தென்றல் எனும் பெயரை
புயல் என மாற்றிக்கொண்டவன்

ஏனிந்தப் பெருவேகம்
எம்மினிய தென்றலுக்கு

வீச்சு விமானத்தையும்
வீழ்த்தும் வடிவம்
அனுமதி கேட்காத
அவசரத் தோழன்
கடல் அலையையும்
கலங்கடித்துச் செல்வான்
வடம் பிடித்தும் வளைக்க முடியாத்தீரன்
தலை நிமிர்ந்து பார்த்தாலே
தள்ளாடச் செய்யும் வேகம்

பாய்ச்சல் கொள்ளும் புலியோடும்
வீச்சில் வெல்லும் விழியோடும்
கலந்து நின்றபடி
ஓய்ச்சல் இல்லாத
பெரும் புயலாய் இன்று..........

ஏனிந்தப் பெருவேகம்
எம்மினிய தென்றலுக்கு

வெடியான கரும்புலிகளின்
வேகத்தை தனதாக்கி
அவர்களின் சுவாசத்தை
தனக்குள்ளே பதிவாக்கி
ஆவேசமாய் பாய்கிறது
கட்டறுத்த தென்றல்

ஈழத்து போர்நிலத்தில்
எத்தனையோ மாற்றங்கள்
அதுதானா இந்த
காற்றுள்ளும் ஒரு வேகம்.



# காதலர் தினம்

*பிறக்கின்ற ஒவ்வொரு ஆண்டிலும்*
*பெப்ரவரி 14ம் திகதி*
*பூமிப்பந்தின் நாடுகளெல்லாம்*
*பூப்பெய்திய திருக்கோலம்*

உலக காதலர் தினம்
வாண வேடிக்கைகளின் பவனி
வாழ்த்துமடல்களின் பரிமாற்றம்
இதழ்களின் முத்த முத்திரையை
விருப்பமுடன் இடம்மாற்றும்
லீலைகளில் காதலர்கள்
காதல் தான் உலகம்
காதல் தான் வாழ்க்கை
காதல் தான் உயிர்
காதல் தான் மனிதம் என
ஊடகங்களின் மொத்தமான
உரத்த பறையடிப்பு

சர்வம் காதல் மயம்
எனும் கோசத்தை ஏந்தி
சங்கீதமாய் உலவும் அன்றைய காற்று

இளமைதான் தேசங்களின்
இயங்கு நிலைச்சக்தி
இருந்தாலும் அவர்களுக்கும்
காதல் தானாம் முக்தி

சூரியனின் காதல்தான் தாமரை
பனித்துளியின் காதல்தான் புல்நுனி
நேரிய நல் வாழ்க்கைப் பாதைக்கே
நிழல் தரும் மேகங்கள் காதல்தானாம்.

காதல் ஒரு கடவுள்
தொடுகையில்லை
தெரிவதில்லை
நுகர்வதில்லை
அறிதல் இல்லை
உணர்தல் மட்டுமே
முடியும் - எனவே
காதல் ஒரு கடவுள்.

அன்றுதான்
சந்தோச ரேகைகள்
உலகெங்கும் பரவும் நாள்
மத்தாப்பாய் இன்பங்கள்
மனசெங்கும் நிரவும் நாள்
காற்றுமண்டலக் கூடுகளிலெல்லாம்
கனவுப்பறவைகள் குடிபுகும்நாள்.
இதுபோலத்தான் அன்றும்
ஆண்டு 2001
பெப்ரவரி 14
உலகத்து நாடுகளிலெல்லாம்
அன்றும்தான் காதலர்தினம்
உள்ளூரில் தமிழர்களுக்கு மட்டும்
ஓய்வான காலமது.........

பூமித்தாயின் நெத்திப்பொட்டாய்
உருவாகத் துடிக்கின்ற ஒரு நாடு
தமிழீழம்
ஆமிஎனும் சிங்களப் படைகளினால்
ஆக்கிரமித்தல் கண்ட ஒருநாடு
தமிழீழம்.

உலகெங்கும் அன்று காதலர் தினம்
உள்ளூரில் தமிழருக்கு ஓய்வானகாலம்.

உலகத்தை எங்கள்மேல் கவனிக்கச்சொல்லி
ஒருதலைப்பட்சமாய் போரோய்வு பேணி
அழிவுள்ளும் சலியாது வாழ்கின்ற தமிழர்
அன்றைக்கும் அமைதியாய் இருந்திட்ட காலம்.

பளைப் பகுதியின் காவலரண்
துப்பாக்கி இருந்தும் சுடாத எம் படையணிகள்
அழைப்பின்றி வருகின்ற பகைவரது முன்னேற்றம்
ஆறுதலாய் கவனிக்கும் எம்மவரின் மதிநுட்பம்

இருந்தாலும் என்ன செய்வது
பேரினவாதிகளின் பெருஞ்சமருக்காய்
எறிகணைகள் மழையாகி
ஊரையே உலுக்கியது
எம்மவரும் பாதுகாப்பாய்
நிலையெடுக்கும் நேரத்தில்
ஒவ்வொரு வெடியதிர்வும்
உள்நுழையத் தொடங்கிற்று.

அம்மா!..........
என் நண்பன் ஒருவனது
உயிர் உறையும் ஓர் அலறல்
கரும்புகை மண்டலத்துள்
கண்ட காட்சியிலும் கரிப்படிவு
ஒரு கால் சிதைந்த நிலையில்
என் போராளித் தோழனின் திருவுருவம்
காலில் இருந்து குருதியும்
முகத்தில் இருந்து வியர்வையும்
வழிந்த போதும்
புரட்சியின் தூய்மையை
அந்த உருவம் சிந்தித்துக்கொண்டிருந்தது

"நாம் சண்டையை விரும்பவில்லை
உயிர் வாழவேண்டுமானால்
சண்டையை விடவேறு வழியில்லை"

அவன் அணிந்திருந்த
வரிச்சீருடையில் மறைந்திருந்த
வரிகள் இதுதானோ!

இரவு வானொலிச் செய்திகளில்
இதயங்களை மகிழ்வித்த
காதலர் தினம்
சிறப்பு நிகழ்ச்சிகளாய்..........

உண்மைதான்
உலகெங்கும் அன்று
காதலர் தினம்.
என்னுயிர் தோழனுக்கோ
அது காலிழந்த தினம்.
இப்படித்தான் எங்களது
வாழ்க்கைப்பாடு.
இனிவருகின்ற
மனித உரிமைகள் தினத்தன்று
எங்கள் உயிர் கூட பறிக்கப்படலாம்
ஆனால்
ஈழத்தமிழனை ஒருபோதும்
காலச் சருகுகள் மூடாது
மாறாக
காலைச் சூரியன்
தினம் பாடும்.



## என் மகள் களத்தில்...

*விடைபெற்றுச் சென்ற*
*என் மகன்*
*வென்றுவந்தான்*
*ஆனால்.......*
*வித்துடலாய்*

ஈழ உதயத்துக்காய்
உயிர்கொடுத்தவன்
எல்லோர் இதயத்திலும்
இடம் பிடித்துக் கொண்டான்
அவனின் இழப்பறிந்த
செய்தி கேட்டு
என் கண்கள் அழுதனதான்
இருந்தாலும்
அவனை பெற்ற வலிக்குள்ளும்
அர்த்தம் இருந்தபோது
என் ஆன்மா சிலிர்த்தது
ஏனெனில் அவன்
ஈழப் புலிப்படையில் ஒருவன்
ஒப்பற்ற தீரன்
ஓயவில்லை அவன் ஆயுதம்
ஓயாத அலைகளாக
முழக்கமிட்டே இருக்கும்

எப்படி அது சாத்தியம்
அதை ஏந்த இன்று
என் மகள் களத்தில்.......



# புனிதப் போரில் புயலாகி.....

புலிவீரன் நிற்பான்
புனிதப் போரில் புயலாகி.......

ஒரு கோடி மின்னல்கள்
ஒரேயடியாய் இடிக்கட்டும்
உலகமே வெடிகுண்டாய்
உடனிங்கே வெடிக்கட்டும்
மேகம் பொழிந்து எல்லோர்
மேனி எங்கும் மூடட்டும்
தாகம் தணியாது நிற்பான்
தன்னை இழந்தும் நிற்பான்

ஓயாத எரிமலைகள்
உக்கிரமாய் பொங்கட்டும்
சாயாத மரங்களெல்லாம்
சரிந்திங்கே வீழட்டும்
பாயும் நதிகள் கூட
கட்டிழந்து போகட்டும்
தாயகக் கனவோடு நிற்பான்
தன்னை இழந்தும் நிற்பான்

எங்கெல்லாம் விழுகின்ற ஷெல்
இங்கு வந்து முழங்கட்டும்
தங்காமல் வெடிமருந்துகள்
தடைதாண்டி முழங்கட்டும்
பொங்கும் கடலாகிப்
போர்வந்து முழங்கட்டும்
புன் சிரிப்போடும் நிற்பான்
புயலின் வடிவுடனும் நிற்பான்

புலி வீரன் நிற்பான்
புனிதப் போரில் புயலாகி..............



# அம்மா

இறைவன் எல்லா
இடமும் நிற்க
முடியாததால் தான்
தாயைப் படைத்தான்
என்பார்கள்.
இறைவனைக் காணமுடியாது
ஆனால்
தாயை காணலாம்
கண்முன் நடமாடும்
தெய்வம் தாய்.

அன்பெனும் உணர்வுக்கு
உயிர், உருவம் கொடுத்தார்கள்
அம்மா வானாள்

அம்மா
உயிரினங்கள்
முதன் முதல்
உச்சரிக்கும் கவிதை.

பத்துமாதங்கள் வரை
வயிற்றில்
பத்து வயது வரை
கண்ணில்
பின் எப்போதும்
நெஞ்சில்
எமை சுமக்கின்ற
சொர்க்கம்

எம் விழிகளில் தூசு விழுந்தால்
தன் விழிகள் கலங்கும்
ஈர இதயம்
உலகம் தாய்மையின்
காலடியின் கீழ்
உருள்கிறது
என்பார் எமது தலைவர்
உண்மை.

தன் உயிர்கொடுத்து
எமைப் பெற்றதுடன்
பால் கொடுப்பதில் இருந்து
அன்பு கொடுப்பது வரை
இப்படி எல்லாமே
கொடுத்துக் கொண்டே இருக்கும்
பெண் கர்ணன்

தான் விரதமிருந்து
எமக்கு உணவூட்டும்
தான் விழித்திருந்து
எமை தூங்கவைக்கும்
தான் அழுக்காகி
எம்மை குளிப்பாட்டும்
எல்லாவற்றிலுமே
தன்னை அர்ப்பணித்து
எம்மை உருவாக்கும்
ஒப்பற்ற தெய்வம்
உலகில்
தாய்!
தாய்!
தாய்!

# அனாதை...

சோகம் என்னைச் சுடுகிறதே
சொந்தம் கொள்ள யாருமில்லை
தாகம் என்று வந்தாலும்
தண்ணீர் குடிக்க நாதியில்லை
அநாதை என்றால் அர்த்தம்என்ன
யாரும் சொல்லுங்களேன் - என்
மனதின் வலியைப் பார்த்து கொஞ்சம்
மருந்து தடவுங்களேன்.

பட்டாம் பூச்சி பிடிக்கும் எந்தன்
சின்ன வயதே - நாளை
கட்டாயம் நான் வாழுவேனா
என்ன உலகே?

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்தது இந்நாடாம் - இப்போ
எந்தையும் தாயும் எங்கே என்றால்
எவர்க்கும் தெரியாதாம்.

பிஞ்சாய் நானும் இருந்தபோது
பிரிந்தேன் உறவுகளை - இன்று
கொஞ்சம் வளர்ந்தும் தேடிப்பார்த்தேன்
காணோம் சிறகுகளை.

போரின் கரங்கள் எந்தன் உறவை
பொசுக்கி விட்டனவோ - இன்னும்
யாரும் அற்று கிடக்கும் என்னை
கசக்கிப் பிழிகிறதே.

இந்தச் சோகம் நெடுநாள் என்னில்
தஞ்சம் புகலவில்லை
எந்தன் நெஞ்சில் இப்போ பூக்கள்
எந்தக் குறையுமில்லை.

யாருமற்று இருந்த என்னை
தேசம் தாங்கிற்று
என் வாழ்வைக் காக்க
இரண்டாம் தாயாய்
தலைவன் இருந்திட்டான்

காந்தரூபன் அறிவுச்சோலை
எந்தன் கண்ணாச்சு - அட
காலம் எல்லாம் ஈழதேசம்
எந்தன் உயிராச்சு.



# அன்பான வெண்ணிலவே

“வானத்திலே ஒரு
வெள்ளித்தட்டு - அதை
போகின்ற மேகங்கள்
மெல்லத் தொட்டு
காவிரிதியெல்லாம்
பாடல் நட்டு - இன்னும்
காத்தே இருக்கிறது
தூது விட்டு ”

வெண்ணிலவே வருவாயா?
வெறிகொண்ட எதிரியை
வென்றிடவே ஆள்தேவை
வெண்ணிலவே வருவாயா?

நான் அழைக்கும் அழைப்போ
அவசர அழைப்பு
நீயோ முகில் கூட்டத்துள்
மூழ்கிப் போய் நிற்கிறாயே
விளையாடும் நேரம் இதுவல்ல
விரைந்துவா வெண்ணிலவே!

பழி கொண்ட சிங்களவன்
பலி கொள்ள நினைக்கிறான்
உயரத்தில் நீயோ
உறக்கத்தில் இருக்கிறாயே
பால்நிலவே பறந்துவா
பாடைகட்டி
பகை அனுப்புவோம்.

காதலர்தம் கருத்தினிலும்
கவிஞரது கற்பனையிலும்
பூதலத்தின் மேனியிலும்
பூத்திருக்கும் வெண்ணிலவே..
சாதலுக்குள் போராடி எதிரி
சதிராட்டம் அடக்குதற்கு
பாடுதலாப்படுகின்ற
பாயும் புலிகளோடு நீயும்
ஆடுகளம் வருவாயா
அன்பான வெண்ணிலவே?

குழந்தைகள் விளையாட
உனைக் காட்டுவார்
குமரிகள் முகத்திரையில்
உனைப் போற்றுவார்
பழங்கதை பேசி
துலங்கிடச் செய்குவார்
இழந்தமண் மீட்க
என்னுடன் வா நிலவே.

எம் துயரம் பார்க்காமல்
ஏன் தேய்ந்து போகின்றாய்
என் தோழன் நீயன்றோ
ஏன் மறைந்து போகின்றாய்
வல்ல புலிப் படையதுவில்
வந்துசேர் வெண்ணிலவே
வரிப்புலியாய் மாறிடுவோம்
வரலாற்றில் வென்றிடுவோம்.



# AK. 47

இது ஆயுதமல்ல
எங்கள் தலைவிதியை
திருத்தி எழுதுகின்ற
எழுதுகோல்

தமிழீழத்தை
உயர்த்தத் துடிக்கும்
நெம்புகோல்

விடியலை வேண்டி
இசைக்கும்
பூபாளப் புல்லாங்குழல்

விடுதலைப் போராளிகளின்
மூன்றாவது கை

ஈழத்தமிழர்களின்
கவசகுண்டலம்

இது ஆயுதமல்ல
கடவுள்
எங்கள் மண்ணை
படைக்கப்போகும்
பிரம்மா
எங்கள் மண்ணை
காத்துக்கொள்ளும்
விஷ்ணு
எங்கள் பகைவரை
அழித்து வெல்லும்
சிவன்
இது ஆயுதமல்ல
கடவுள்
ரஷ்யாவை சேர்ந்த
"மிகைல் கிளாஷ் நிக்கோ"
இதை
கண்டு பிடித்தார்
அவரது கைகளை
அன்புடன் பற்றி
வாழ்த்தும் ஆவலில்
நாங்கள்
காரணம்
எங்கள் வாழ்வுக்கு
வெளிச்சம் தந்த
சூரியன் இது.

நாங்கள்
பணம் கொடுத்து
வாங்கியிருந்தால்
பழுதாக்கி இருப்போம்
உயிர்கொடுத்து வாங்குவதால்
உயர்வாகவே பேணுகிறோம்.

தலைவனின்
நெருங்கிய
மெய்க்காப்பாளன்
தமிழர்களின்
ரத்த உறவுக்காரன்

எங்கள் போராளிகளின்
குருதித்துணிக்கைகளால்
உறுதிபெற்ற
இரும்பு மனிதன்

1947
உலகிற்கு AK47 கிடைத்தது
1948
இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது
சுதந்திரம்
எம்மீது கறுப்புத்துணி போர்த்தியது
AK47
அதைச் சிவப்பாக்க எங்களுக்கு உதவியது
எனவே தான்
இலங்கையின் சுதந்திரத்தைவிட
AK47
எங்களுக்கு பெறுமதியானது.



# ஊர்

விடுதலைப் பயணத்தில்
வேதனையின் கோடுகள்
ஓயாத போர் நிலத்தில்
பாரிய உயிர்த் தியாகங்கள்
அடுத்தென்ன எனும்போது
அடிமனதில் உந்துதல்கள்
இருந்தாலும்..........
அன்னியன் எம் ஊரில்
இருக்கவே கூடாது.



# முதன் முதலாய்........

*25-12-1997*
*வியாழக்கிழமை*
*கிறிஸ்மஸ் நாள்*

*நிதர்சனம் நிறுவனத்தின்*
*தர்மேந்திரா கலையகத்திலிருந்து*
*ஒலிப்பதிவாளர் கிருபாண்ணாவுடன்*
*ஒலியமைப்பு வேலை ஒன்றிற்காக*
*புறப்படுகிறேன்*
*நேரம் மாலை 6மணி*

*ஒலிக்கான உபகரணங்களுடன்*
*வாகனம் ஒன்றில் பயணம்*

*நேரம் 6.30*
*வாகனம் நிற்கிறது*
*பிரத்தியேகமான ஒருஇடம்*
*பொருட்களுடன் இறங்குகிறோம்*

அழகாக அலங்கரிக்கப்பட்ட
ஒரு மேடை
அதை அண்டி பெரிய மண்டபம்
அதில் வரிசையாக
ஆசனங்கள் அடுக்கப்பட்டிருந்தது.

எல்லாமே எழிலாய்
அதேநேரம்
எளிமையாய்....

வாகனம் வாகனமாய்
போராளிகள் வந்து
இறங்கியபடி இருந்தார்கள்

நாம் எமது
ஒலியமைப்பு ஆயத்தங்களில்
ஈடுபட்டோம்.

இன்று
கலைநிகழ்ச்சி ஒன்று
ஏற்பாடாகி இருப்பது
அப்போதுதான் எனக்கு
தெரியும்.

சகல படையணிகள்
பிரிவுகளைச்சார்ந்த
குறிக்கப்பட்ட
ஆண்பெண் போராளிகள்
கலந்து கொண்டார்கள்
சில போராளிகள்
ஆயுதங்களை
தயார் நிலையில்இருத்தி
பாதுகாப்புக்கு நின்றார்கள்.

மின் வந்தவுடன்
ஒளி விளக்குகள் ஒளிர்ந்தன
நாமும்
பாடல்களை ஒலிபரப்ப
அந்த இடம்
களை கட்டியது.

பாதுகாப்பும்
பலப்படுத்தப் படுகிறது
முக்கிய தளபதிகளும்
வந்து இணைந்து கொண்டனர்
எல்லோர் முகங்களிலும்
ஒருவித மலர்ச்சி பரபரப்பு
ஏன்?
எனக்கு விளங்கவில்லை.

"இண்டைக்கு
ஆள் வருவாரோ"
இடையில் சில முணுமுணுப்பு
ஆர் அந்த "ஆள்"
சத்தியமாய் எனக்கு
தெரியாது.

எல்லோரையும்
அணிப்படுத்தி
அமர்த்துகிறார்கள்
முன் ஆசன வரிசை மட்டும்
வெறுமையாய்..
நிகழ்வுகள் தயாராகுகின்றன
எல்லாம் சரியாகி விட்டது
நேரம் 7.15

ஒரு வாகனம் வந்து நிற்கிறது
கதிரையில் இருந்தவர்கள்
உட்பட
எல்லோரும்
எழுந்தார்கள்
“ஏன் ”? தெரியாமலே
நானும் எழுந்து நின்றேன்.
வாகனத்தின் கதவுகள்
திறக்கப்படுகின்றன
சில போராளிகள் ஆயுதங்களுடன்
இறங்கி நிற்கிறார்கள்.
இறுதியாய்...........
மிக லாவகமாக
ஓர் உருவம் இறங்கியது.

கறுப்புச் சப்பாத்து
முழுமையான
வரிச்சீருடை
தனது மெய்க்காப்பாளர்
சிலருடன்
அஜபானுவாக
அதேவேளை
அமைதியாக
“அவர்” வந்து கொண்டிருந்தார்.

உலகத்தமிழர்கள் பார்க்கத் துடிக்கும்
உலக நாடுகள் அதிசயத்து
நோக்கும்
ஒவ்வொரு தமிழனையும்
தலை நிமிர வைத்த அந்த
பெயருக்கு சொந்தக்காரனாகி
ஒவ்வொரு தமிழனது
இதயத்தையும் தனது
சொந்த வீடாக்கிய
“அவர்” வந்துகொண்டிருந்தார்.

பிரபாகரன்
தமிழீழ தேசியத்தலைவன்
உலகத் தமிழர் நேசிக்கும் தலைவன்
மண்டபத்துள் அவர் நுழைந்ததும்
புன்முறுவலுடன்
வணக்கங்கள் பரிமாறி
முன் ஆசனமொன்றில்
அமர்கிறார்.
உடன் தளபதிகள் இருக்க
அனைவரும் அமர்கிறோம்.

நிகழ்வுகள் தொடங்கியது
நானெங்கே நிகழ்ச்சியைப் பார்த்தேன்.

நான் எங்கள் தலைவனையே
பார்த்தபடி இருந்தேன்
என் கண்களையே என்னால்
நம்ப முடியவில்லை
எத்தனை நாட்கள்
புகைப்படத்திலும்
தொலைக்காட்சியிலும்
பார்த்துப் பார்த்து
ஏங்கிய உருவத்தை
முதன் முதலாய்....
நேரில்...
அன்றுதான்

முதன் முதலாய்...
எனக்குள் நான் பிறந்தேன்
முதன் முதலாய்...
எனக்குள் வளர்ந்தேன்
முதன் முதலாய்...
எனக்குள் நான் நிமிர்ந்தேன்
முதன் முதலாய்...
நானும் ஈழத்தமிழன் என்று
எனக்குள் நான் கர்வப்பட்டேன்

புல்லரித்து போகும்
நிமிடங்கள் அவை
அட
என்னத்தைச் சொல்வேன்
குழந்தையின் சிரிப்பும்
கொள்கையின் பிடிப்பும்
எப்போதும்
அந்த முகத்தில்
இருந்தது.

தான்
எல்லோரையும் பார்க்கும் போதும்
எல்லோரும் தன்னைப் பார்க்கும் போதும்
அந்த முகம்
ஆழ்கடலின்
அமைதியாக இருந்தது.
நிகழ்ச்சி தொடர்கிறது.......

அடுத்து நான் கவிதை
பாடவேண்டும்
அழைத்தார்கள்
மேடையேறி கவிதை
வாசித்தேன்
நானெங்கே
கவிதை வாசித்தேன்
அந்தத் தலைவனுடைய
கண்களையல்லவா
வாசித்துக்கொண்டிருந்தேன்
எல்லோரும் கைதட்டினார்கள்
நினைவு திரும்ப
இறங்கி வந்தேன்
ஏனோ
எனக்கு அன்று
எல்லாமே
முதன் முதலாய் பட்டது

இந்த பூமி
இந்த வானம்
அருகிலிருந்த மேடை
தளபதிகள்
போராளிகள்
எல்லாமே எனக்கு
முதன் முதலாய்...

தனக்கு
அருகில் இருக்கும்
தளபதிகளுடன் கையசைத்து
கண் மலர்த்தி
அவர் கதைக்கும் பாங்கு
ஒவ்வொரு
அங்க அசைவுகளும்
எனக்குள்ளே சரித்திரமாக
பதிவு செய்யப்பட்டுக்கொண்டிருந்தது

ஒவ்வொரு நிமிஷமும்
"எங்கட அண்ணை
எங்களுக்கு முன்னால்"
என்னும் நினைப்புடன்
நான்.

ஒவ்வொரு
நிகழ்ச்சி முடியும் போதும்
வரும்
முதலாவது
கைதட்டல்
அவருடையதாகத்தானிருந்தது.

துறுதுறுக்கும்
அந்தக்
காந்தக் கண்களின்
பார்வையில்
வீரமும் ஈரமும்
ஒன்றாகக் குடியிருந்தன

நிகழ்வு முடிய
போராளிகளுடன்
ஒன்றாக சாப்பிட்டார்
சிரித்து சிந்தித்து
பேசினார்.
இறுதியில்
“எல்லாம் வெல்லுவம்”
என்றவாறு
கையசைத்து
விடைபெற்றார்.

அப்போது
நம்பிக்கையே
அவரைத்தான் நம்பியிருப்பதாய்
எனக்குப்பட்டது.

முடிவில்
நேரம் 11.30
நாங்களும் வாகனம்
ஒன்றில்
முகாமுக்காய் புறப்பட்டோம்.

நான்
அண்ணைக்கு
“ஐஸ்” வைப்பதாய்
நீங்கள் கருதினால்
அது உங்கள் தப்பு.

ஏனென்றால்
பனிக்கட்டி மழையாக விழும்
உலக நாடுகள் கூடத்தம்
மூக்கில் விரல் வைத்தபடி
அதிசயமாக
அவரின்
ஆளுமையின் ஆற்றலை
வியப்புடன் பார்க்கும்
காலமிது

அதைவிட
எவரின் தூற்றுதல்களும்
எவரின் போற்றுதல்களும்
எங்கள் தலைவனை
ஒருபோதும் பாதிப்படையச் செய்யாது
அவர் எப்போதும் தன்
கடமையையே செய்துகொண்டிருப்பவர்.

நீங்களும்
ஒரு நாள் அவரைக் காணுவீர்கள்
அப்போது
உங்களுக்குள் புதிதாய்
நீங்களே பிறப்பதை உணர்வீர்கள்

அத்தகைய
பெருந்தகையிடம்
எனக்குப் பிடித்தது
அவர்,
ஈழத்தமிழன்
நல்ல மனிதன்
இலட்சிய விடுதலைப்போராளி
உயர்ந்த தலைவன்.

வாகனத்தில் வந்துகொண்டிருந்தோம்
ஒரு பாடல்
"பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே"
ஆம்
அதுவும்
எனக்கு கேட்டது
முதன்முதலாய்.....

# ஆசை

ஆசையென்பது அன்பின் வடிவம்
அதனை அடைவது வாழ்க்கைப் படிமம்
பேசும் பொருளாய் எந்தன் கனவில்
பிறந்த ஆசைகள் இந்தப் பொழுதில்

இதயக் கதவுக்குள் துடிக்கின்ற ஓசைகள் - நான்
பாடுகிறேன் ஒவ்வொன்றாய் என்மனசின் ஆசைகள்

தலைவனின் மனதுக்குள்
தமிழீழ ஆசை - அதை
தாங்கிடும் எங்களுக்கும்
தலைவனில் ஆசை
நிலைபெறும் விடுதலை
விரைந்திட ஆசை
நீங்களும் புலிகளாய்
சிறந்திட ஆசை


காசியண்ணன் கவிதையிலே
சொல்லாக ஆசை
கடற்புலிகள் செல்கையிலே
படகாக ஆசை
தேசப்புயல் வீசுகையில்
வெடியாக ஆசை
தேச இருள் அகலும் நேரம்
விடிவாக ஆசை

புலிக்கொடியை வானிலேற்றும்
நூலாக ஆசை
பொங்குதமிழ் எழுச்சியிலோர்
ஆளாக ஆசை
தாய்மடியில் ஒருமுறைதான்
உறங்கிடவே ஆசை
தமிழ் மண்ணில் மீண்டும் நான்
பிறந்திடவே ஆசை

சண்டையிடும் புலியானேன்
வரிஉடை போட ஆசை
அண்ணையுடன் அருகிருந்து
படமெடுக்க ஆசை
அண்டவரும் பகைவர்க்கு
எமனாக ஆசை
ஆண்டதேசம் மீண்டுமெழ
அழியாதஆசை

கானக்கருங்குயிலின்
இசையாக ஆசை
காலக் குரல் ஒலிக்கும்
திசையாக ஆசை
மானத்தமிழர்களின்
மொழியாக ஆசை
மாவீர நண்பர்களுக்கு
மலராக ஆசை

தமிழர்களின் விழிகளுக்கு
இமையாக ஆசை
தயங்கிடாமல் பணிசெய்து
உயர்ந்திடவே ஆசை
அழகு தரும் ஆசையெல்லாம்
நிகழ்ந்திடவே ஆசை
அதைக்கண்டு மகிழ்ந்ததன்பின்
இறந்திடவே ஆசை.



# புலம்பெயர்ந்தவர்கள்

வெளிநாடுகளில்
கூடுகட்டி வாழும்
ஈழத்து பறவைகள்
அவர்கள்

பனிவிழும் நாடுகளில்
பல்வேறு மொழிக்கிடையில்
எமக்காக பாடுபடும்
இதயங்கள்
தம் குடும்பம் மட்டுமல்ல
தமிழீழ குடும்பத்துக்காய்
இரவு பகல் பாராது
தூக்கமின்றி
வாழ்வின் சகலவசதிகள் இருந்தும்
அனுபவிக்கும் அவகாசமின்றி
உழைக்கிறார்
உழைக்கிறார்

அவர்கள் சிந்தும்
வியர்வைத் துளிகள்
எங்கள் போராட்டத்துக்கான
பொன் முடிச்சுகள்
இவர்கள்
அப்பிள் பழத்தை உண்ணும் போதும்
பனம்பழத்தை நினைப்பவர்கள்
ஈழத்தின் வேர்களுக்கு
பலம் சேர்க்கும்
காலத்தின் விழுதுகள்
உலகம் முழுவதும்
அவர்கள்
பணிசெய்து கிடப்பது
சொந்தநிலம்
சுதந்திரம் காணவே
அவர்களது
உணவு
உடை
உறையுள்
எல்லாம் அங்குதான்
உள்ளம் மட்டும்
என்றும்
இங்குதான்.



# பஞ்சபூதங்கள்

பஞ்சபூதங்களே வந்து பாருங்களே
மாவீரர்களை மீண்டும் தாருங்களே

நிலமே உனக்கு வணக்கம் - உன்
நெஞ்சுக்குள் இவர்கள் அடக்கம்
மண்ணுக்காய் போரிட்ட பூக்கள் - உன்
மடியில் உறங்கும் தீக்கள்
மெல்ல இவர்களை பிறக்கவிடு - உன்
மேனியின் கல்லறைகள் திறந்துவிடு

நீரே உனக்கு கோபமா - இந்த
வீரர்கள் வாழ்க்கை சாபமா
பாறைக் குள்ளும் நீயிருப்பாய் - இந்த
பாசங்களை ஏன் சாகவிட்டாய்
கண்ணீர் கூட நீதானே - எம்
காவல் தெய்வங்களை தருவாயே

**தீயே** என்ன வாழ்கிறாய் - எம்
பிள்ளைகள் தின்றா வளர்கிறாய்
தாயைப் பிரிந்து வந்தவர்கள் - உன்
தணலில் இன்று வெந்தவர்கள்
பகையை கொழுத்து பாடுகிறோம் - எங்கள்
பாலகரைத் தா வாடுகிறோம்.

**காற்றே** எங்கும் வீசிறாய் - உன்னில்
கலந்தவர் எத்தனை பேசுவாய்
தலைவன் வளர்த்த புயல்களையும் - நீ
தாங்கித்தானே மூசிறாய்
போற்றி உன்னை தொழுகின்றோம் - எம்
புதல்வர்கள் மீண்டும் எழவேண்டும்.

**வானே** எங்கும் தெரிகிறாய்- எம்
வாசல் தோறும் வருகிறாய்
தேசப் போரில் மறைந்தவர்கள் - உன்
தேகம் முழுதும் உறைந்தவர்கள்
மேகமேறியே வரவேண்டும் - பூ
மேனிகளில் உயிர் தர வேண்டும்.



# எல்லைப்படை வீரன்

ஒரு கிழமைக்கான
உணவுப்பொருள்
சேகரிப்பதற்காய்
மேலதிக உழைப்பு
குடும்பத்தின் தலைவன்
நாட்டின் தொண்டனாகி.....

அவசர அவசரமாய்
அலுவல்கள் முடித்து
ஆயுதத்துடன் பயணம்
எல்லையில் காவல்
பிள்ளைகளின் நினைவையும்
நுளம்புக் கடியையும்
தாங்கியபடி
விழித்திருப்பு

சண்டை
சொல்லிக் கொண்டல்ல
திடீரென்று வரலாம்
சாவும்
சொல்லிக் கொண்டல்ல
திடீரென்று வரலாம்

இருந்தும்
வீட்டுக்கும்
நாட்டுக்கும்
உழைக்கும் திருப்தியில்
இந்த
எல்லைப்படைவீரன்.

# எனக்கின்னும் தெரியவில்லை

அவசரமாய் கவியெழுத
பேனாவை தலைகுனிந்தேன்
கண்களை மூடி
கனவுக்குள் புகுந்தேன்
மனக்கண்ணின் சிறகுவிரித்து
கருப்பொருளை தேடினேன்
எனக்குள்ளே வரும் அந்த
ஊற்றெங்கே வாடினேன்
ஒரு இழவும் வரவில்லை
ஒரு வார்த்தை எழுதவில்லை

கட்டாயக் கல்யாணம் போல்
கவிதை என்னில் கலக்கவில்லை
இதுமட்டும் ஏனென்று
எனக்கின்னும் தெரியவில்லை
நினைத்த உடன் கவியெழுத
நான் இன்னும் பழகவில்லை

சுடச்சுட தமிழ் வந்து
சேர்ந்துவிடும் ஞானமில்லை
சடக்கென்று ஒரு பாட்டு
சத்தியமாய் வந்ததில்லை
இதுமட்டுமில்லை
நானாக கவிஎழுதல்
எப்போதும் நடந்ததில்லை.

பின் எப்போது
என் கவிக்கு சிறகு முளைக்கிறது
கவிதை தானாக வருகிறது.
நானாக எழுத வந்தால்
ஒரு வார்த்தை வராது
தானாக கவிதை வந்தால்
வார்த்தைகளின் ஊர்வலம் தான்
அதை தெரிவு செய்து நானெழுதும்
நிகழ்வு அது போர்க்களம் தான்

வெள்ளைத் தாள்கள் இங்கே
சமாதானம் சொல்லினும்
எனக்கும் கற்பனைக்கும்
எனக்கும் தமிழுக்கும்
எனக்கும் உணர்வுக்கும்
இடம்பெறும் தொடர்சண்டை
கவிதையாகிறது.

அது எப்போது வருகிறது
இன்றுவரை தெரியவில்லை
வீதிகளில் போனாலும்
விளையாடிச் சிரித்தாலும்
பாதித் தூக்கக் கனவோடும்
பசிக்கின்ற வேளையிலும்
நீராடும் பொழுதினிலும்
போராடும் நிலையினிலும்
எதுவென்று குறிசொல்லமுடியாது
திடீரென்று வருமிந்த
விருந்தாளி கவிதை

உடனேயே சிறைகொள்ளவேண்டும்
இல்லை
உணர்வின்றி உதிர்வாகிப் போகும்.

நான் வாழும் சூழல்கள்
ஏற்படுத்தும் பாதிப்பை
உணர்வுகள் எனக்குள்ளே
பதிவாக்கும்
அவை கருக்கட்டி எப்போது
வெளிவருகின்றதோ
அதுதான் என் கவிதையின்
உயிர்ப் பொருளாகும்

பச்சைப் புல் நிலங்கள்
என் கவியின் மேய்ச்சல் நிலம்
பறவைகளின் சிறகசைப்பு
கவிதைகளை சுளுக்கெடுக்கும்

மழை தொடர்ந்து பொழிகிறது
நனைகின்றன கவிதைகள்
மேகங்களின் அணிவகுப்பு
கவிதைகளுக்கு தலை துவட்டல்

இப்படி
கவிதைகள் உலகெங்கும்
இருக்கிறது
அது எனக்குள்ளே எப்போது
ஜனிக்கிறது
என்பதுதான் புதிராக இருக்கிறது.

காற்று
கடவுள்
தும்மல்
கர்ப்பம்
இவைபோன்று
கவிதை
எப்போது எப்படி எங்கே எவ்வாறு
வருமென்று
எனக்கின்னும் தெரியவில்லை.



# பயங்கரவாதிகள்

"அவர்கள்" எங்களது
வீடுகளை எரித்தார்கள்
"அவர்கள்" எங்களது
வேலிகளை முறித்தார்கள்

பாடசாலை கோயில்களை
உடைத்தார்கள்
எங்கள் உறவுகளை
கொலை செய்தார்கள்
எங்கள் மொழியை
கொச்சைப்படுத்தினார்கள்
எங்கள் மண்ணை
அபகரித்தார்கள்
இளம்பெண்களை சூறையாடி
புதைத்தார்கள்
சின்னஞ்சிறுசுகளை
பொசுக்கினார்கள்

இடம் பெயரவைத்தார்கள்
உயிர் பிரியவைத்தார்கள்

எங்கள் சொந்த நிலங்களில்
கண்ணீரும் ரத்தமும்
கலந்து ஓடச் செய்தார்கள்
அதில் "அவர்கள்"
படகு விட்டார்கள்
நீந்தி விளையாடினார்கள்.
துப்பாக்கியால் சுட்டார்கள்
எறிகணைகளை வீழ்த்தினார்கள்
விமானங்களால் குண்டு வீசினார்கள்
கடலிலும் அடித்தார்கள்
கனவிலும் இடித்தார்கள்

இப்படியே
அழிப்பதற்காக
ஈழத்தமிழர்களை
தீயிலே போட்டு
கருக்கிக் கொண்டு இருந்தார்கள்
போரைக் கொண்டு
ஏறி மிதித்தார்கள்.

தன்னைக் கொல்ல வந்த
பசுவையும் கொல்லலாம்
இது தர்மம்

பொறுக்க முடியாமல்
நாங்களும்
"அவர்களை"
அழிக்கத் தொடங்கினோம்
உடனே
அவசரமாய்
உலகம் கூடிச் சொன்னது
எங்களை
"பயங்கரவாதிகள்"

# தாயகத்து கோயில்கள்

தாயகத்தின் கோயில்கள்
தலைவணங்கும் பாடல்கள்
மாவீரர் துயிலிடங்கள்
மனமொன்றி வழிபடுங்கள்
காவல் தெய்வங்கள் கல்லறைக்குள் வாழ்கிறார்
காற்றிலும் உயிர்மூச்சாய் கலந்து வீசுவார்

மேகங்கள் பூத்தூவி
போகின்ற நேரங்கள் - இவர்
மேனியை சிலிர்க்கவைக்கும்
விழி நீரின் ஈரங்கள்
தாகங்கள் கொண்டவீரர்
கண் திறக்கும் வேளை
தாய்மண்ணும் பூப்பதற்காய்
கருவெடுக்கும் நாளை

வீரங்கள் விடுதலைக்காய்
விதையான காலங்கள் - இந்த
தேசத்தின் உயிர்மூச்சில்
கலந்துவிட்ட வேதங்கள்
போரெங்கள் வாசலிலே
போட்டுவைத்த சோகம்
போராடி விதையான
வீரர் கதை பேசும்.

## ஒவ்வொன்றிலும்.......

செந்தூரமே மேக
மந்தாரமே வானின்
சஞ்சாரமே
மழையாகிப் பொழிகின்றபோதும் - எம்
மனசுக்குள் இன்பங்கள் ஊதும்.

வானத்திலும் தமிழ்
மானத்திலும் என்
கானத்திலும்
விடியல் ஒன்றையே சொல்வேன் - என்
விரல்களால் வேதனை வெல்வேன்.

ஈரங்களும் எம்மவர்
வீரங்களும் போரிடும்
நேரங்களும்
வாழ்க்கையைப் புடம்போடும் சந்தம்- எம்
வரலாற்றை மீட்கின்ற சொந்தம்.

யுத்தங்களில் வெடிச்
சத்தங்களில் மனச்
சித்தங்களில்
உணர்வுகளின் ஒன்றுபட்ட கலவை - அட
உறுதிதான் அதற்கின்னும் தலைமை.

காற்றோடும் உயிர்
சாற்றோடும் கடந்த
நேற்றோடும்

ஒவ்வொரு தமிழனுக்கும் வலியுண்டு - ஆனால்
அவர் உள்ளத்தில் ஒவ்வொரு புலியுண்டு.

சிங்களத்தை அந்த
வெங்களத்தை ஆதிக்க
கம்பளத்தை
சுருட்டித்தான் தீயாற்றில் இடுவோம் - எம்
சுதந்திரத்தின் உச்சத்தை தொடுவோம்.

பாசத்திலே தமிழர்
நேசத்திலே மலரின்
வாசத்திலே
தாய்மண்ணின் முகம்தானே தெரியும் - எவர்
கண்ணுள்ளும் தீ நடனம் புரியும்.

தீயாகியும் ஏன்
பூவாகியும் எம்
தாயாகியும்
கரும்புலிகள் செய்கின்ற உயிர்த்தியாகம் - இந்த
காலம் தான் அழிந்தாலும் அதுவாழும்.

புலிகளில் போராடும்
விழிகளில் உயிர்த்
துளிகளில்
பொன் தட்டாய் வீரத்தின் குடியிருப்பு - அவர்
போராடும் உறுதியில் அடி நெருப்பு.

ஆத்தோரத்தில் புல்லின்
காத்தோரத்தில் நீரின்
சேத்தோரத்தில்
ஈரத்தின் படிமங்கள் உரமாகுது - எம்
மண்ணுக்கு அதுதானே வரமாகுது.

சத்தியத்தில் எங்கள்
நித்திலத்தில் கொள்கைப்
பத்தியத்தில்
தவறாத பற்றோடு வளரும் - எம்
உள்ளத்தின் சிறகுகள் தான் உயரும்.

காட்டாறாய் தமிழ்ப்
பாட்டாறாய் எங்கள்
நாட்டாறாய்
விடுதலையின் நதிதானே பாய்கிறது - அது
வெடிமருந்தின் வாசம்தான் மேய்கிறது.



# அரிய பேறு கிடைக்கவில்லை

நல்லூரின் வீதியிலே
நீ நடத்தும் யாகமதை
நான்கு வயதுதனில்
நான் நின்று பார்த்திருந்தேன்.

எல்லோரும் அழுதார்கள்
ஏன்? எனக்குப்புரியவில்லை
அமைதிப் படைகூட
அமைதியாக இருந்ததே
அன்று எனக்கு விளங்கவில்லை.

"அன்பான மக்களே" என்று
ஆசையுடன் பேசினாய்
அது என்ன? தெரியவில்லை.

தேர் பார்க்க வந்த எனக்கு
பார் திலீபனை அம்மா காட்டினாள்
ஓர் இழவும் தெரியாமல்
ஒரு தடவை பார்த்து வைத்தேன்.

அன்று எனக்கு பசியெடுக்க
அன்னையவள் முகம் பார்த்தேன்
ஆனால் அவளோ உந்தன்
அரிய முகம் பார்த்து நின்றாள்
ஆத்திரம் தான் எனக்குள்ளே
அமைதியுடன் காத்திருந்தேன்.

அண்ணலே என் திலீபா
அது இன்று விளங்குதடா
நாம் சுகமாய் வாழ்ந்திடவே
நாயகன் நீ உருகிநின்றாய்
விழுந்திடாமல் எங்களுக்கு
வேர் மரமாய் நீ இருந்தாய்.

அன்று உன் ஆதங்கத்தை
இன்றெண்ணிப் பார்க்கின்றேன்
நான்கு வயது தனில்
நான் நின்று பார்த்ததைவிட
நல்லதொரு பூமலராய்
அன்று நான் இருந்திருந்தால்
அடைந்திருப்பேன் உன் அடியை
அரிய பேறு கிடைக்கவில்லை.



# களத்துமேட்டுக் காதல்

*முல்லைச் சமரில்*
*அவளை*
*முதல் தடவை*
*பார்த்தான்.*

*சத்ஜெய சண்டைகளில்*
*கண்களால்*
*பேசிக்கொண்டான்.*

*எடிபல முன்னேற்றம்*
*சண்டையில்லை*
*என்றாலும் சந்தித்தான்.*

ஜெயசிக்குறுய்
பலமாத தொடர்சமர்
எறிகணை மழையிலும்
இடை இடை
புன்சிரிப்புகளின் பரிமாற்றம்.

கிளிநொச்சிச் சமர்
ஓயாத அலைகள் இரண்டு
அவளிருந்த படையணியும்
கலந்துகொண்டது
வார்த்தைகளின் பயணம்
உரையாடல்கள்.

ஒப்பரேஷன் வோட்டஜெற்
ஓய்வு நேரங்களில்
சொந்தங்களின் விசாரிப்புகள்
சுகநலன் வேண்டுதல்
பெயரும் முகமும்
மனதில் பதிகிறது.

ஓயாத அலைகள் மூன்று
சண்டை தொடர்கிறது
சந்திக்கிறார்கள்
பேசமுடிவதில்லை
கண்களின் பார்வைகளுக்குள்
மனசும் தெரிகின்றன
இதயங்கள் இடம்மாறுகிறது.

ஆனையிறவு வெற்றிச்சமர்
இருவரும்
பங்கேற்றுக்கொண்ட
மகிழ்வின் நிமிடங்களில்
காதலும் கனிகிறது.

முகாம் திரும்பியதும்
முதல் வேலையாக
அறிக்கைகளாக்கி
அமைப்புக்கு தெரிவிக்கிறார்கள்.

தீச்சுவாலை எதிர்சமர்
காதலர்களாகி பங்கேற்ற
முதல்சமர்
சண்டையும் காதலும்
வெற்றிபெற்ற
இன்ப நாள்.

இப்பொழுதோ
சமாதானம்
எல்லோருக்கும் மகிழ்ச்சி
அரசியல் பணிக்காய்
அவன் யாழ்ப்பாணத்தில்
அதேபணியுடன் அவள்
திருமலையில்
அவர்கள் மட்டும்
சந்திக்க முடியாமல்......
கடிதங்களில்.



# சமாதானங்கள்

ஈழத்தமிழர்களுக்கு
காலம் காலமாய்
மூச்சுவிடக் கிடைக்கும்
அவகாசங்கள் தான்
சமாதானங்கள்
ஒப்பந்தங்கள்
எல்லாம்.

எங்கள் ராணுவ
மேலாண்மை உயரும்போதும்
உலகின் பார்வை
எம்மீது திரும்பும் போதும்
பிறப்பெடுக்கும் இத்தகைய ஓய்வுகள்.
ஆனால் அவையெல்லாம்
மாதத்திற்கு கிடைக்கும்
மழைபோல் - இந்த
காலத்திற்கு கிடைக்கும்
கணப்பொழுதுகள்.

உண்மையில்
தென்னிலங்கையில்
சிங்களப் பேரினவாதிகளின்
சிந்தனைகளில்
தம்பதிபக் கோட்பாடுகள்
தகர்க்கப்படும் வரையில்
ஆதிக்கப் பூஞ்சணங்கள்
அகலும் வரையில்

அரசியல் யாப்புகள்
அறுவைச் சிகிச்சைக்குட்படும் வரையில்
சில பிக்குகளின் மனங்களில்
காவித்துணி கழரும் வரையில்
ஒருபோதும்
கிடைக்கவே கிடைக்காது
இத்தீவில்
நிரந்தர சமாதானம்.

நாங்கள்
எவ்வளவும்
விட்டுக் கொடுக்கலாம்
தன்மானம் இழந்திடாமல்
ஆனால் அதை அவர்கள்
அனுபவிக்கிறார்களே தவிர
எம்முடன்
அனுசரிக்கிறார்கள் இல்லை
எனவே இம்முறையும்
எப்போதும் போலவே
போரா?
சமாதானமா?
சிங்களமே
தீர்மானிக்கட்டும்.



# கடல்

உலகத்தாயின்
விழிக்குளம்
மணல் இமைகளை
விலத்தி
மலர்த்திடும் பார்வை

நீர் நிலைகளின்
அரசன்
நுரைப்பூக்கள்
மலரும்
நந்தவனம்

மீன்களின் வாழ்க்கையை
எழுதும்
உப்பு நீர் மை

மேகங்களின்
தாய்

படகுகளின்
சொர்க்கம்
சிலவேளைகளில்
நரகம்


கடற்புலிகளின்
தரைப்பாதை
கரும்புலிகளின்
உயிர்ப்பாதை
ஈழத்தமிழர்களின்
குருதியோட்டம்

உப்பிட்டவரை உள்ளவும்
நினைப்பது போல்
உப்பையே உள்ளவும்
நினைக்கும் உயிர்

சூரிய ஒளிக்கதிர்களை
மொழிபெயர்க்கும்
தண்ணீர்த்தாள்

வெட்கம்
அலை
கோபம்
கொந்தளிப்பு
வானத்தின்
கண்ணாடி

பெரிய தாய்
பலஉயிர்களை
தன் கர்ப்பத்தில்
சுமக்கிறது.
மொத்தத்தில்
வெய்யிலில் கிடந்தாலும்
எதுவும் வற்றாத
காயாத
கருவாடு.



# முரண்பாடுகளில் ஓர் இணக்கப்பாடு

*செவ்வானம் அசைகிறது*
*நடுவில் மஞ்சள் சூரியன்*
*புலிக்கொடி.*

*பூவும் தீயும் அரவணைப்பு*
*ஆணுக்கும் நடக்கும் பிரசவிப்பு*
*கவிதை.*

*ஒரு கதிரின் வரவுக்காய்*
*பல உயிர்களின் தவம்*
*கல்லறை வயல்.*



புல்கூட தின்கிறது
தாய்மண்ணின் காதலில்
விடுதலைப் புலி.

கோயிலில் சூரன்போர்
அடியார்கள் திருக்கூட்டம்
எல்லையில் சமர்.

ஒரு தாயின் மகன்
தமிழினத்தின் தாய்
பிரபாகரன்.

எல்லோர் விழிகளிலும் ஈரம்
ஒருவன் கண்மூடிச் சிரித்தபடி
வீரச்சாவு.

எல்லோரையும் அழிக்கிறது
எங்களைக் காக்கிறது
துப்பாக்கி.

வாழ்க்கை உண்டியலில்
புரட்சியின் சில்லறைகள்
போராட்டம்.

நஞ்சுக்கழுத்து சிவன்
காத்தல் தொழில் விஷ்ணு
போராளி.

# வந்து பாருங்கள்

“அ”னாவை நானும் எழுதவேண்டி
ஆயுத எழுத்தை ஏந்தினீர்கள்
பூக்களை என் கைகள் ஏந்த
போரின் மடியில் தூங்கினீர்கள்

தலைவர் மாமா தானே தமிழர்
முகவரி என கூறினீர்கள்
என்னைப் போலே சின்ன மழலைகள்
வாழ வேண்டி போகிறீர்கள்

சின்ன எந்தன் கையைப்பிடித்து
கூட்டிச் செல்லும் அண்ணாக்களே
சிரிக்கும்போது தூக்கி என்னை
அணைத்துக் கொள்ளும் அக்காக்களே

அம்மா சொன்னார் எங்கள் தெய்வம்
நீங்கள் தானாமே
அன்று முதலே உங்கள் இல்லம்
வந்து தொழுவேனே

பள்ளிசெல்லும் போதுமுங்கள்
படத்தை அங்கு பார்க்கிறேன்
எங்கள் ஆசான் சொல்லும் பாட்டில்
உங்கள் கதைகள் கேட்கிறேன்

தந்தை தாயைப் போல நீங்கள்
சொந்தமானீர்கள்
உங்கள் விருப்பம் போலவே வளர்வேன்
வந்து பாருங்கள்.



# போர்க்குறள்

துப்பாக்கி தூக்காத தோழாகி நின்றால்
தப்பாகிப் போகும் நிலம்.

கண்ணில் உறக்கம் கனவு அழித்தல்
மண்ணில் விடிவு தரும்.

ரவையும் குண்டும் கைவசமிருந்தால்
கவலை வேண்டா வெல்.

போர்முகம் தனிலே ராங்குகள் ஊர்வலம்
ஆர்.பி.ஜி ஒன்றே எதிர்ப்பு.

களத்தில் பகைவர் கூட்டம் கண்டால்
விழுத்து எறிகணை மழை.

பதுங்கு குழியும் சண்டைக் கானதே
படுக்கை எண்ணம் தவிர்.

விசைவில் அழுத்தி இலக்கை வீழ்த்தல்
அசையாது செய்து முடி.

காவல் கடமை களத்தில் ரோந்து
சாதல் தவிர்க்கும் முயற்சி.

உயிரைக் கொடுத்தும் உரிமை மீட்கும்
இனமே நாடு பெறும்.

இடர்கள் நீங்கி இன்பம் பொங்கும்
விடுதலை விரைவில் பெறின்.



## ஈழத்தாயே?

எங்கள்
கண்ணீர்த் துளிகளால்
பன்னீர் தெளித்தோம்

குருதியால் வாசலில்
கோலங்கள் செய்தோம்

இடம் பெயர்ந்து
இடம் பெயர்ந்து
இடம் விட்டுக்
கொடுத்தோம்.

எறிகணைகள்
ரவைகளை
எத்தனை முறை
தாங்கினோம்.

உறுப்புகளை இழந்தும்
கூட
பொறுப்புகளை சுமந்து
நின்றோம்
உறவுகளை
பிரிந்திருக்கிறோம்
சிறகுகளை
முறிந்திருக்கிறோம்.
இவைகளை விட.....
எத்தனையோ
உயிர்களை விதையாக்கித்தானே
குளிர்ப் பந்தல்
அமைத்து தந்திருக்கிறோம்

இதன் பின்னும் கூட
ஏன் வரவில்லை
ஈழத்தாயே?.....



# செம்மணி

இமைகளை மூடி இங்கே
அனைவரும் தூங்கும் போதும்
சுமைகளாய் நெஞ்சில்
சோகத்தின் நிகழ்வு உண்டு
அலைகளைத் தாண்டி ஆழக்
கடலென இருந்திட்டாலும்
உலைக்களம் போல உள்ளக்
குமுறல்கள் கூட உண்டு

வனப்போடு நாம் வாழ்ந்த
வளமான மண்ணை
சினத்தோடு பகைவன்
அழிக்க வந்தான் உண்மை
தனக்காக இல்லாது
தாய் நாட்டின் விடிவிற்காய்
இனக்காப்பின் எதிரொலியாய்
இடப்பெயர்வு எங்களுக்கு

பெற்ற தாயை விட்டதுபோல்
பிறந்த மண்ணை விட்டுவந்தோம்
பிள்ளைகளாய் வந்தோம் அல்லோம்
பிணங்களாகி பெயர்ந்துவந்தோம்
ஒற்றுமையாய் கூடி நாங்கள்
ஓரிரவில் குடி பெயர்ந்தோம்
பற்றுவைத்து தாய்மண்ணின்
விடுதலைக்காய் அடி எடுத்தோம்.

மணக்காத மல்லிகையாய்
மகிழ்வில்லாப் புன்னகையாய்
வணங்காத தெய்வங்களையும்
வாசலெங்கும் தொழுது வந்தோம்
பிணக்காடாய் வந்தபோதும்
பெரும் நெரிவில் உதிர்ந்த போதும்
இழக்காத மன உறுதியில்
எமக்குள் மட்டும் அழுதுவந்தோம்.

தமிழீழத் தலைவனது
குரலுக்காய் நகர்ந்து வந்தோம்
தமிழ்த்தாயின் விலங்கொடிக்கும்
விரலுக்காய் விரும்பி வந்தோம்
அளவான எம் ஊரின்
அழகெல்லாம் விட்டுவந்தோம் - நாங்கள்
களவாகிப் போனதுபோல்
கனவெல்லாம் பட்டு வந்தோம்.

தாய் தந்தை சகோதரத்தை
சனக்கடலில் பிரிந்து வந்தோம்
வாய் பேசும் வலுவுமின்றி
வரண்டு நாங்கள் திரண்டு வந்தோம்
பேய்கூட மனமிரங்கும்
படியாக வந்த போதும்
நாய் கூட நமக்காய்
அன்று எங்கும் குரைக்கவில்லை

பவித்திரமாய் இருந்த நாங்கள்
சமுத்திரமாய் பெருக்கெடுத்தோம்
பலத்தை மட்டும் இழந்திடாமல்
நிலத்தைவிட்டு நீங்கி வந்தோம்
நெஞ்சுக்குள்ளே கனமிருந்தும்
நீண்டதூரம் நடந்து வந்தோம்
அஞ்சி வந்தோம் என்றால் இல்லை
அவதாரம் எடுத்து வந்தோம்.

பாடசாலை வளவுகளை
பம்பலடித்த நினைவுகளை
வாடைக்காற்றின் வளைவுகளை
வாழ்க்கை தந்த விளைவுகளை
குடியிருந்த வீடுகளை
மடி நிறைந்த வயல்வெளியை
படியளந்த தெய்வங்களை
எல்லாம் பாதியிலே விட்டுவந்தோம்.

இது தானா இடப்பெயர்வு
இல்லை இல்லை
எங்கள் இலட்சியத்தின் ஒரு நகர்வு

மையிருட்டுக் காலத்தில்
மழைமுகிலின் ஈரத்தில்
எய்துவிட்ட எறிகணைகளின்
இடையில் நாங்கள் நடந்துவந்தோம்
வீட்டுக்கு பூட்டுப்போட்டு
வெளிக்கிட்ட நாங்கள் பின்னர்
சாலையோரம் வந்தபோதே
சாவிகளைத் தொலைத்துவிட்டோம்

கூட்டைவிட்டு அந்த
நள்ளிரவில் புறப்பட்டு
குறுகிய நேரத்தில்
நாங்களுமே தொலைந்து போனோம்.

வையகத்தில் யார் அறிவார்
அந்த வரலாற்று அவலத்தை
ஐயோ சொல்ல முடியவில்லை
அன்றுகண்ட சம்பவத்தை

கால்நோக நடந்துவந்த
கர்ப்பிணித் தாயவளின்
கதறல் கூட அவள்
காதுக்கே கேட்கவில்லை
அவளுக்கே தெரியாமல்
கருவிலிருந்த குழந்தை
அவசரத்தில் பிறந்தபோதும்
அன்னைக்கும் உயிரில்லை.

உறவுகளைப் பிரிந்தவரின்
ஓயாத அழுகைக்குள்
சிறகுகளை இழந்தவரும்
சேர்ந்தழுது கொண்டார்கள்.

வாழ்ந்து முடித்த பெரியவர்கள்
வாழத்துடிக்கும் இளையவர்கள்
வாழவிருக்கும் சிறியவர்கள்
எல்லாம் அந்த
காலநதியின் தாளகதியில்
கரைந்து போனார்கள்.

கேட்பாரற்று கிடக்கும்
அந்தப் புழுதித்தெரு - அன்று
மடைதிறந்த மனித வெள்ளத்தில்
அள்ளுண்டு போனது
சிட்டுக்குருவிக்கு கூட தெரியாத
செம்மணியின் பெயர்
சில நொடிக்குள்ளே தமிழர்
வரலாற்றில் பதிந்த துயர்.

யாழ்ப்பாண வரவேற்பு வளைவை
தாங்கிய பொட்டல்வெளி
பார்க்கவே முடியாத அந்தப்
பயணத்தால் விழிகசிந்தது

வெடியோசைக்கு மத்தியில்
வானிலும் சில இடியோசைகள்
வெளியான இடத்தில் கூட
அழியாத மனிதச் சுவடுகள்

வரலாற்றில் தடம்பதித்த
தமிழர்கள் நாங்கள் என்று
மனமேற்று வரும்போது
மேகமெல்லாம் அழுதிற்று
அடைமழையாய் பொழியும்போதும்
அனைவருமே ஒன்றாகி
விடுதலையின் விருட்சத்தை
வேருடனே கொண்டு வந்தோம்.

30- 10- 1995 அன்று நெஞ்சில்
அப்பிய வலி இன்னும் தான் நீங்கவில்லை
இதுதானா இடப்பெயர்வு
இல்லை இல்லை
எங்கள் இலட்சியத்தின் ஒரு நகர்வு.



# இன்று புலர்ந்தது எதற்காக?

இன்று புலர்ந்தது எதற்காக
இதயம் எரியுதே விளக்காக
வென்று தாயகம் மகிழும்வரை
விதைகள் எழுதிடும் உறுதியுரை
இன்று புலர்ந்தது எதற்காக
இதயம் எரியுதே விளக்காக

பூமி சுழற்சியை நிறுத்தும் - முழுப்
பூக்களும் உணர்விலே திளைக்கும்
சாமி எனவே போற்றும் - எங்கள்
சரித்திர நாயகர் நினைவிலே கலக்கும்
கார்த்திகை 27
தீயின் புதல்வர்களின் திருநாள்
நாடும் வீடும் நலம்பெற
நமக்காய் வீழ்ந்தவரை தொழும்நாள்

தாயும் தாயகமும் இருகண்ணாய்
நெஞ்ச முகத்தில் இவர் பதித்தார்
ஓயும் போதும் உள்ளத்தில்
உறுதியை மட்டுமே சுமந்திருந்தார்
தேயா நிலவாய் இதயவானில்
தெரிந்தார் எங்கும் திசைகள் மீதில்
சாயா மலையாய் சமர்க்களத்தில் - இவர்
சண்டையிடும் திறன் தனித்துவத்தில்

மண்ணில் விடுதலை மணிமகுடம் - இவர்
மனதில் தினம் தினம் அணிவகுக்கும்
கண்ணில் தலைவனின் நினைவிருக்கும் - எந்த
கணத்திலும் வெற்றியை வசப்படுத்தும்.

சங்கர் தொடங்கிய சரித்திரம் - கேணல்
சங்கரை இழந்தும் பயணிக்கிறது
தங்கம் வைர மணிகளெல்லாம் - இந்த
தாயக வீரர் முன் வணங்கிறது
பொங்கும் விடுதலை உணர்வுகளை
பொத்திவைத்த பெரும் புயல்கள்
எங்கும் ஈழத்தின் புகழ் பரவ
உயிரையும் எழுதிய புதுக்கவிகள்

குடும்ப உறவின் சுகம் பிரிந்து
கூட இருந்தவர் தனைப் பிரிந்து
நடந்தார் நாட்டின் நிலை உணர்ந்து - இன்று
நாடே குடும்பமாய் அதை நினைத்து

இன்று புலர்ந்தது எதற்காக
இதயம் எரியுதே விளக்காக



# விடுதலை

மா சீனி இல்லை
மருந்துப் பொருட்கள்
இல்லை
மண்ணெண்ணெய் இல்லை
மொத்தத்தில்
பொருளாதாரத்தடை.

எறிகணை வீச்சு
விமானக் குண்டுவீச்சு
தொடர் சண்டை
மொத்தத்தில்
அமைதி இல்லா வாழ்க்கை

கொல்லப்படுதல்
காணாமல் போதல்
ஊனமுறல்
மொத்தத்தில்
மனிதத்திற்கு இங்கே
உத்திரவாதம் இல்லை.

வாழ்வில் எந்தவொரு
இன்பத்தையுமே
அனுபவிக்காத
சமுதாயமாய்
ஈழத்தமிழ் மக்கள்

இதற்குள் இருந்து
கொண்டுதான்
போராளிகளுக்கு உதவுதல்
அவர்களுக்கு
உணவில் இருந்து
நிதி வரைக்கும்
வழங்கி வளர்த்தல்

தலைவனையே
தங்கள் நம்பிக்கையாக்கி
தாயகப் பற்றோடு
வாழுதல்

இதைவிட
சண்டைகளில்
எல்லைப்படை வீரர்களாய்
வாகனச் சாரதிகளாய்
விநியோகிகளாய்
உலர்உணவு கொடுப்பதில்
உறுதி ஊட்டுவதில்
குருதி தானம் செய்வதில்
இப்படியே
மக்கள் போராட்டமாக்கி
சண்டையை
வெற்றி பெறச்செய்வதில்
அதற்குள்ளும்
மகிழ்வோடு வாழுவதில் என
இவர்களுக்கு நிகர்
இவர்கள் தான்.

இப்படியானவர்களுக்கா
கொடுக்கக்கூடாது
விடுதலை?



# கல்லறைகள் பல எழலாம்

நடக்கின்றோம்
நாலுபேர் சுமந்து செல்ல
நாமும் நெஞ்சில் ஏந்திக் கொண்டு
நடக்கின்றோம்.

மேடையில் வைத்து
அவன் புகழ் கூறி
"தாயகக் கனவுடன்"
தாவிவரும் கானம் கேட்டு
ஓயாத எரிமலை இன்று
பாயாது தணிந்து என்று
வீர வசனங்கள் பேசி
வேட்டுக்கள் தீர்த்து
விதைத்திடுவோம்
வித்துடலாய்............

மலர்தூவி மண்தூவி
மௌனமாக அஞ்சலித்து
கண்ணான எம்மவனை
கல்லறையாய் மாற்றிடுவோம்

இத்துடன் முடிந்ததா
அவனது போராட்டம்

ஏங்கி நின்ற இதயமெல்லாம்
தாங்கி நிற்கும் அவன் உறுதியை
ஒரு மரமாய் விழுந்தவன்
பல விழுதாய் படைவருவான்

வித்துடல் மீதிருந்து எத்தனையோ
சத்துயிர்கள் பிறப்பெடுக்கும்
எரிமலைகள் உறங்கிடாது
எரிதணலாய் சீறி எழும்

கல்லறைகள் பல எழலாம்
வல்ல தலைவன் வழிநடந்து
எல்லைகளை மீட்கும் வரை
கல்லறைகள் பல எழலாம்
எமதீழம்
கனவல்ல
அதுவரைக்கும்......

நடக்கின்றோம்
நாலுபேர் சுமந்துசெல்ல
நாமும் நெஞ்சில் ஏந்திக்கொண்டு......

# ஒளிக்கடவுள்கள்

துப்பாக்கிச் சன்னங்களை
உமிழ்ந்தபடி
இராணுவத்தினர்
எமது காவலரணை
உடைத்து
உள்நுழைகின்றனர்
எதிர்ச்சமர் வெடிக்கிறது

அவர்களை எதிர்த்தபடி
துணிவுடன்....
தன்கையிலிருக்கும்
கருவியில்
இலக்குப் பார்க்கிறான்
ஒரு போராளி

எறிகணை மழையாக
களமுனையே அதிர்கிறது
இருந்தும்
அவன்மட்டும்
நிதானமாய்
இலக்கை பார்த்தபடி

சிலவேளை
இராணுவத்தினர் சுடும்
ரவை தாக்கி
அவன் சாகக்கூடும்

அப்போதும்
அவன் கையிலிருந்த
கருவி
அவன் கட்டளைப்படி
தன் கடமையை செய்தபடியே
இருக்கும்

இப்படித்தான்
பல சண்டைகளில்
ராணுவத்துக்கு எதிரில்
வீடியோ கமராவை
ஏந்தியபடி
எங்கள்
ஒளிக் கடவுள்கள

போர்ச்சூழலின் தாக்கம் மறந்து
காட்சிகளின் பரிணாமம்
உணர்ந்து
களப்படப் பிடிப்பை
மேற்கொள்ளும்
போராளிகள் வாழ்வு
இவ்வாறுதான்.

அவர்களின்
கண்களில் விழுந்தவை
கமராவில் காட்சிகளாய் பதிகிறது
அந்த காட்சிகள் தான்
நாளைய எம் தேசத்திற்கு
சாட்சிகளாகின்றன.

இந்த நம்பிக்கையில்
ஒவ்வொரு
களப்படப்பிடிப்பாளனும்
மீண்டும்
மீண்டும்
உயிரையே கண்களாக்கி
அந்தக் காட்சிகளுக்குள்ளே
கரைந்து போகிறான்.



# இயற்கையின் பாடம்

ஆத்தங்கரையில்
நாணல் புற்கள்
நீரில் அடிக்கடி
மூழ்கியபடி.......
வீசும் காற்றில்
அங்குமிங்கும்
தலைசாய்ந்தபடி.....
இறுதியில் மீண்டும்
நிமிர்ந்து.... அட!
புல்லுக்குள்
இவ்வளவு வீரமா?

மனிதர்களே!
இயற்கை ஒவ்வொன்றிலும்
உங்களுக்கு பாடமிருக்கிறது.



# முகம்


அவன்
வேறு பெயரில்
வேறு மொழிபேசியபடி
வேறு இடம் ஒன்றில்
வித்தியாசமாக...........

அவன் எப்படி
இங்கே?
இல்லை இல்லை
இது
வேறு யாரோ?

திரும்பி வரும்போது
வெடியோசை வானைப்பிளக்கிறது
அந்த இடம் புகைமண்டலமாய்........

## களவெண்பா

வீரம் தற்காப்பு வேகம் விவேகமென
சேரும் இடமெல்லாம் திசைவெளிக்கும் - பாரும்
மனபலம்தான் என்றும் மண்மீட்கும் மற்றெல்லாம்
கனவொன்றை காண்கின்ற கண்.




# முற்றுப் பெறாத காவியம்...

*12000ற்கும் மேற்பட்ட
விருத்தங்களைக் கொண்டு
கம்பனால் எழுதப்பட்ட கம்பராமாயணம்
பக்தி இலக்கியமாய்......*

*1330 எண்ணிக்கையான
குறள்களைக் கொண்டு
திருவள்ளுவரால் பாடப்பட்ட திருக்குறள்
பொய்யா மொழியாய்....*

*17668ற்கும் மேலாய்
மாவீரக் கவிதைகளை
இழந்தும் தமிழர்களின் குருதியால்
எழுதப்பட்டுக்கொண்டிருக்கும்
ஈழவிடுதலைப் போராட்டம் மட்டும்
முற்றுப்பெறாத காவியமாய்......*





*“புதிய இலக்கிய விளைச்சலுக்கு*
*விதையெறிந்து விட்டு*
*காத்திருக்கிறது எம் வீரமண்.*
*எங்கள் கனவுக்கும்,*
*எதிர்பார்ப்புக்கும் இந்த இளைய*
*தலைமுறையே நம்பிக்கை*
*நாற்றங்கால். நாற்றுமேடையில்*
*செழிப்புற்றுள்ள பயிர்களில்*
*ஒருவர் வீரா.”*

கவிஞர் புதுவை இரத்தினதுரை

தர்மேந்திரா கலையகம், நிதர்சனம்